Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-31 14-06-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 116



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12121)

# நவம்பர் மாதம்வரை பாராளுமன்றத்தை ஒத்திவைக்க சந்திரிகா தீர்மானம்?

## வரவு-செலவுத் திட்டம்வரை தாமதிக்க முடிவு

(கொழும்பு)

**உத்தேச பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டபின்பு நவம்பர் மாதம் வரவு–செலவுத்திட்டம் சமர்ப்பிக்கும் வரை பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.**

அரசாங்கத்திற்கு வழங்கி வரும் ஆதரவை ஜே.வி.பி. வாபஸ் பெறும் பட்சத்தில் தற்போது அரசாங்கத்திலுள்ள 120 ஆசனங்கள் 81 ஆக வீழ்ச்சியடையும். ஆதலால் ஆட்சி கவிழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது அரசாங்கத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இடது சாரிகள்-65, ஈ.பி.டி.பி.-01, சிறிலங்கா மு.கா.மாற்றுக் குழு-04, இ.தொ.கா-08, ரோகித பொகொல்லாகம-01 மற்றும் ஜாதிக ஹெல உறுமய-02 என 81 ஆசனங்கள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன. ஜே.வி.பி யின் ஆசனம் 39 ஆகும். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்த வரை உத்தேச பொதுக்கட்டமைப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா-ரணில் நேற்றுச்சந்திப்பு; புதிய முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்து பொதுக்கட்டமைப்பு தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர். நேற்றுமாலை 3.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை தனிப்பட்ட முறையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்தச் சந்திப்புத் தொடர்பான விடயங்கள் எதுவும் வெளிவராதபோதிலும் குறிப்பிடத்தக்க முடிவு எதுவும் இந்தச்சந்திப்பின்போது ஏற்படவில்லையென ஐக்கியதேசியக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேவேளை ஏற்கனவே ஐக்கிய தேசியக்கட்சி சனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ள-கடிதங்களாகத் தயாரிக்கப்பட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உயிலங்குளம் சோதனைச்சாவடியில் போராளிகள் மீது படையினர் கெடுபிடி கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாவடியில் போராளிகள் மீது படையினர் மேற்கொண்ட கெடுபிடி நடவடிக்கையானது யுத்த நிறுத்த மீறலாகும். இதுகுறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. என மன்னார் மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் அருந்தவம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாவடியூடாகக் கடந்த சனிக்கிழமை மன்னார் நகரப் பிரதேசத்திற்குள் அரசியல் பணிக்காக வந்து கொண்டிருந்த விடுதலைப்புலிகள், இயக்க உறுப்பினர்களைச் சோதனைச்சாவடியில் வைத்து இராணுவம் வழிமறித்து அவர்களைச் சயனட் குப்பிகளுடன் செல்ல அனுமதி மறுத்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மட்டக்களப்பு அலுவலகம் மீது நேற்று இரவு 9.00 மணிக்கு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோட்டமுனை வீதியிலுள்ள அலுவலகத்தின்மீது இந்தக் கைக்குண்டு வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குண்டுவீச்சுச் சம்பவத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தில் பணியாற்றிய ஊழியரான மட்டக்களப்பு பாரதி ஒழுங்கையைச் சேர்ந்த, பாக்கிராஜா தனபாலன் (வயது-22) என்பவர் காயங்களுக்குள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், இவருக்கு ஆபத்தான காயங்கள் எதுவும் ஏற்படவில்லையெனவும், இவரது காயங்களுக்கு தற்போது சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் மட்டக்களப்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அலுவலகம் பூட்டப்பட்டிருந்தவேளையில், வீதியால் வந்த இனந்தெரியாத நபர்கள் இந்தக் கைக்குண்டை வீசிவிட்டுத் தப்பிச்சென்றிருப்பதாக மட்டக்களப்பு பொலிசார் தெரிவிக்கின்றனர். அலுவலகம் அமைந்திருக்கின்ற பகுதியில் உடனடியாகப் பொலிசார் நிறுத்தப்பட்டு, அந்த வீதியூடான போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டிருந்தது.

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ; பொலிசார் கண்ணீர்ப்புகைவீச்சு



பாதுகாப்புத்தேடி பதுங்கும் பௌத்த பிக்குகள்

(கொழும்பு)

உத்தேசப் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம் ஆர்ப்பாட்டப் பேரணியை கொழும்பில் நடத்தியது. ஆர்ப்பாட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்களைக் கலைக்க சிறிலங்காப் பொலிசார் கண்ணீர்புகைக்குண்டுகளை வீசினர். மருதானை தொழில்நுட்பக்கல்லூரிச் சந்தியிலிருந்து சனாதிபதி மாளிகையை நோக்கி மாணவர்கள் செல்ல முயன்றனர். பௌத்த பிக்குமார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கறுப்புக்கொடிகளை ஏந்தியவாறும் கறுப்புப்பட்டிகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மரண வீட்டின் மீது குண்டுத் தாக்குதல்; சொருவிலவில் ஒருவர் பலி; 15 பேர் காயம்

(கொழும்பு)

பொலநறுவை சொருவில என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் மரண வீட்டின் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் ஒருவர் பலியானதுடன் 15 பேர் வரை காயமடைந்துள்ளனர்.இவர்களில் 12 பேர் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட நபர் ஒருவரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த சனிக்கிழமை இப்பிரதேசத்தில் உந்துருளியில் பயணித்தோர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் ஒருவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த பேரினவாதிகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் சவப்பெட்டி ஊர்வலம்

### டக்ளஸின் கொடும்பாவியும் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுக்கட்டமைப்பிற் கெதிரான சிங்கள பௌத்த பேரினவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் அதற்கு துணைபோகும் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவினைக் கண்டித்தும் யாழ். பல்கலைக் கழக சமூகம் சவப்பெட்டி ஊர்வலமொன்றை நேற்று நடாத்தியது.

காலை 10.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் கூடிய பெருமளவான மாணவ, மாணவிகள் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர் முன்னதாக மரணவீடுகளிற்கு ஒலிக்கும் பறைகள் இசைக்கப்பட அதைத் தொடர்ந்து வீதி வழியே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவி இழுத்துச் செல்லப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வரி விளம்பரம்

### காணி

### விற்பனைக்குண்டு

இல. 59/3 முரசுமோட்டையில் வீடு,கிணறுடன் தென்னை, மா மற்றும் ஏனைய பயன் தரும் மரங்கள் அடங்கிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்வோர் நேரில் வரவும். (6256)

### புதிய புத்தகம்

விற்பனையில் சாதனை செய்த "இது இந்துமதம்" நூலின் ஆசிரியர் "சாமிஜி" எழுதிய புதிய புத்தகம் "கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்" விலை ரூபா 80/=

பரணன் 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.தொலைபேசி-2222365 (5384)

### தவறிவிட்டது

க. நாகதீபன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை (832431281v) கிளிநொச்சிக்கும், இரண்டாம் கட்டைக்கும் இடையில் 10.06.05 வெள்ளிக்கிழமை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்-க.நாகதீபன் (6264)

### இடம் மாற்றம்

முல்லை வீதியில் அமைந்திருந்த யாழ் வேந்தன் (Mithu) தையலகம் தற்போது புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வீதியில் அமைந்திருக்கின்றது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம். (6171)


## –கரும்புலிகள் நாளையொட்டி–

# சர்வதேச பேரவை நடாத்தும் கவிதைப் போட்டி - 2005

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கவிதைப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

இப் போட்டியின் நிபந்தனைகளாக:-

*. தேசவிடுதலையை மையமாகக் கொண்டு படைப்புக்கள் ஆக்கப்படவேண்டும்.

*. 30 வரிகளுக்கு குறையாமல் 40 வரிகளுக்கு மேற்படாமலும் படைப்புக்கள் அமைய வேண்டும் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது.

*. வயது வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது எனவும். கவிதைகள் யாவும் இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாக வந்துசேர வேண்டுமெனவும் வெற்றியீட்டும் படைப்புக்களுக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படைப்புக்கள் சேர வேண்டி முகவரி:-

கவிதைப் போட்டி -2005
தலைமைச் செயலகம்
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

# சிறிலங்கா புலனாய்வுப் பிரிவுடன் செயற்படும் தேச விரோதக் குழு கப்பம் கேட்டு கைக்குண்டு வீச்சு!

## -அம்பாறையில் வைத்தியரின் வீடு சேதம் .

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்படும் தேச விரோதக் குழுவொன்று இந்துக் கோவில் வீதியில் வசிக்கும் பிரபல முறிவு,தறிவு வைத்தியரின் வீட்டின் மீது கைக்குண்டு வீசியுள்ளது. இதன் போது அவ்வைத்தியரின் வீடு சேதத்திற்குள்ளாகியுள்ளது.

கடந்த சில தினங்களாக அம்பாறைமாவட்டத்தில் செல்வந்தர்களின் வீடுகளிற்குச் செல்லும் மேற்படி தேச விரோத ஆயுதக்குழு கப்பம் கேட்டு மிரட்டி வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே வைத்தியரின் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இக்கைக்குண்டு வீச்சு மூலம் மக்களை எச்சரித்து அச்ச நிலையில் வைத்திருக்கவே தேச விரோதிகள் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாண்டியன்குள வர்த்தக சங்க உறுப்பினர்களுடன் சந்திப்பு

பாண்டியன்குள பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து வர்த்தக சங்க உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்று பாண்டியன்குள அரசியல்துறை செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் பாண்டியன்குள பிரதேச பொறுப்பாளர் இலக்கியன் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் சமகால அரசியல் தொடர்பான கருத்துக்களும், வர்த்தக சங்கத்தின் கட்டமைப்புத் தொடர்பான கருத்துக்களையும் பிரதேச பொறுப்பாளர், துணுக்காய் பிரதேச காவல்துறைப் பொறுப்பாளர் வதனன் ஆகியோர் வழங்கினர். (24)


### வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

### கட்டட நிர்மாண ஒப்பந்த வேலைகள்

கூலி ஒப்பந்த அடிப்படையில் அடுக்குமாடிக் கட்டடங்கள், சாதாரண கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குத் தகுதியான ஆளணி உடையோரும், ஆற்றலுடையோரும் உடன்தேவை.

● **கூலி வீதம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

தகுதியுடையோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
**கண்டிவீதி,**
**ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி.**
தொலைபேசி எண்: 021-2285917 (6266)



## NATIONAL HIV/AIDS PREVENTION PROJECT

**GRANT NO: HO 13-CE**

## NATIONAL COMPETITIVE BIDDING
## (CIVIL WORKS)
## INVITATION FOR BIDS(IFB)

## IFB NO: NHAPP/IDA/NCB/W/29/04

1.The Democratic socialist Republic of sri lanka has received a grant from the International Development Association towards the cost of National HIV/AIDS Pervention Project and intends to apply part of the funds to cover eligible payments under the Contract as Detailed in table below.Bidding is opened to all bidders from eligible source countries as defined in the *Guidelines: procurement IBRD Loans and IDA Credits.*

2.The Project Director, National HIV/AIDS Prevention Project, invites sealed bids from eligible bidders for the works as detailed in table below.

3.Bidding documents (in tow copies) may be purchased till 11.00 hrs on 30/06/2005 on the submission of a written application from the project Director, National HIV/AIDS Prevention Project at the address given below for a nonrefundable fee of Rs.1,000/- for each set either in cash or Demand Draft from any Scheduled Bank payable at Colombo and in favour of project Director National HIV/AIDS Prevention Project.

4. Interested bidders may inspect Bidding document free of charge prior to collection if desired and obtain further information from the address as under.

Procurement Management Specialist
National HIV/AIDS Prevention Project.
Premises Opposite No.29
De Saram place,Colombo 10
Tel/ fax: 2677030/2687015
e-mail: psnhapp@sltnet.lk

5.Bids shall be valid for a period of 90 days after date of bid opening and must be accompanied by security of amount Rupees Fifteen Thousand (Rs.15,000/-) drawn in favour of project Director, National HIV/AIDS Prevention Project on or before 11:00 hrs of 08/07/2005, at which time they will be opened in the presence of the bidders who wish to attend if the office happens to be closed on the date of receipt of the bids as specified the bids will be received and opened on the next working day at the same time and venue.

6. Other details can be seen in the bidding documents.

**TABLE**

| Contract Package No | Name of Work | Bid Security (Rs) | Cost of Bidding Document (Rs) | Period of Completion | ICTAD Grade Buliding Construction |
|---|---|---|---|---|---|
| NHAPP/IDA/NCB/W/29/04 | Additions, Alternations, Repairs and Refurbishment of **Chest Clinc at the General Hospital Kilinochchi** | 15,000/- | 1,000/- | Four (04) Months | M-9 |

7.Bidders are advised to note the minimum qualification criteria specified in Clause 4 of the Instructions to Bidders and as appearing in the Bidding Data to qulify for the award of the individual contract.

8.Bidders are erquired to be registered with the Institution of Construction Training and Development (ICTAD) under **Grade M9** (Building Construction) or above and possess valid membership of National Construction Association of sri Lanka (NCASL). The Contractor, or his identified sub-Contractor; for electrical and water supply / Sanitary engineering work is desirable to possess a valid registration with ICTAD and NCASL

Project Director
National HIV/AIDS Pervention Project.
Premises Opposite No.29,De Saram Place
Colombo 10
Sri Lank
Tel: 2677030 Fax:2687015
e-mail: psnhapp@sltnet.lk

**Note: There will be a pre bid-meeting on 23rd June 2005, at 11.00 a.m in the office of the National programme for Tuberculosis Control& Chest Diseases, Narahenpitia.**

(கி-122.04)

# காஷ்மீர் பிரச்சினையை இரண்டே வாரத்தில் தீர்க்கலாம்

(கோலாலம்பூர்)

**அரசியல் உறுதி இருந்தால் இரண்டே வாரங்களில் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று பாகிஸ் தான் அதிபர் முஷாரப் கூறியுள்ளார்.**

காஷ்மீர் பிரச்சினையை இரண்டு ஆண்டு களில் தீர்க்கலாம் என்று சிலர் கூறியது குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இரண்டு வாரம் என்று ஒரு பேச்சுக்குச் சொன்னேன். இந்தியா, பாகிஸ்தான் தலைவர் களிடம் உறுதி வேண்டும். அப்படி இருந்தால் விரைவில் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம். இப்போதுள்ள சூழ் நிலையில் இரு நாடுகளின் தலைவர்களும் எப்படியாவது பிரச்சினையைத் தீர்க்கும் வேகத்துடன் செயற் படுகின்றனர் என்றார்.

அவுஸ்திரேலியா செல்லும் வழியில் எரி பொருள் நிரப்புவதற்காக அவரது விமானம் கோலாலம்பூரில் தரையிறங்கியது. அப்போது நிருபர்களிடம் முஷாரப் பேசினார்.

சியாச்சினிலிருந்து படைகளை வாபஸ் பெறுவது எல்லையின் இரு நாடுகளின் படை களையும் குறைப்பது குறித்து பேச்சு நடந்து வருகின்றது இந்தப் பேச்சு மூலம் பலன் கிடைக்கும் என நம்புகிறேன் என்றார்.



-முஷாரப்



சீனாவில் உணவுவிடுதியில் கடந்த வெள்ளியன்று ஏற்பட்ட தீயைஅணைத்து மீட்புப் பணியாளர்கள். அங்கிருந்த பொருட்களை மீட்டபின் குழுமி நிற்கின்றனர். இவ் விபத்தின் போது 33 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கசனாதிபதிஜோர்ஜ்புஷ்நேற்று(இடமிருந்து வலமாக) நமீபியசனாதிபதி,மொசாம்பிக் சனாதிபதி போஸ்வானா சனாதிபதி, நைஜீரியா சனாதிபதி, கானாசனாதிபதி ஆகியோரை சந்தித்தார். வோஷிங்டனிலுள்ள வெள்ளைமாளிகையில் ஓவல் அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

## வளைகுடா நாடுகளின் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்

(ரியாத்)

வளைகுடா நாடுகளின் ஒருங்கிணைப்பு சபையில் கூட்டம் சவுதித் தலைநகர் ரியாத்தில் சனிக்கிழமை முடிவடைந்துள்ளன. இதில் ஆறு வளைகுடா நாடுகளின் வெளியுறவு அமைச் சர்கள் பங்கேற்றனர்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் வகையில் சர்வதேச மையம் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று சவுதி இளவரசர் அப்துல்லா சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

அவரது இந்த யோசனைக்கு சர்வதேச அளவில் தீவிரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு ஈராக் மீதான தாக்குதலுக்குக் கண்டனம் மற்றும் இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தம் ஏற்பட பாடுபட்டு வரும் பாலஸ்தீனத் தலைவர் முகம்மது அப்பாஸ் நடவடிக்கைகளுக்குப் பாராட்டு ஆகிய வை தொடர்பான தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டன.



ஈராக்கியத் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்றுக் கைதுசெய்யப்பட்ட சிலரை அமெரிக்க இராணுவத்தினர் தடுத்து வைத்திருக்கின்றனர்.

## பொலிவியாவில் புதிய சனாதிபதி

அமெரிக்கா அருகேயுள்ள பொலிவியாவின் அதிபர் கார்லோஸ்மெசா பதவி விலகியதைத் தொடர்ந்து அந்த நாட்டின் புதிய சனாதிபதியாக நீதிபதி எட்வார்டோ ரோட்ரிக்ஸ் நிய மிக்கப்பட்டுள்ளார். இவர் காபந்து சனாதிபதியாக இருந்து தேர்தலை நடத்துவார் என்று கருதப்படுகிறது.

இயற்கை எரிவாயு ஆதாரத்தை வெளிநாட்டினர் தோண்டி எடுக்க அனுமதி அளித்ததை எதிர்த்தும் அதை நாட்டு உட மையாக அறிவிக்கக்கோரியும் பழங்குடி இன மக்கள் மூன்று வார மறியல் போராட்டம் நடாத்தியதால் கார் லோகஸ் பதவி விலகினார்.

## மெக்சிகன் பத்திரிகை ஆசிரியருக்கு டேனியல் பியர்ல் விருது

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

சிறந்த பத்திரிகையாளருக்கான 'டேனியல் பியர்ல்' விருது லொஸ் ஏஞ்சல்ஸில் திஜுவானாவில் இருந்து வெளிவரும் வாரசெய்தி ஏடான 'ஜெடா'வின் ஆசிரியர் ஜீசஸ் பிளான்கோ நேளாவுக்கு (வயது-68) சனிக்கிழமை இரவு வழங்கப்பட்டது.

லொஸ் ஏஞ்சல்ஸ் பிரஸ் கிளப்பின் 47 ஆவது ஆண்டு விழாவில் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

அரசுத்துறையில் மலிந்து வரும் ஊழல், போதை மருந்து கடத்தல் போன்ற பிரச்சினைகள் குறித்து தைரியமாக செய்தி, விமர்சனம் மற்றும் கட்டுரைகள் வெளியிட்டமைக்காக இந்த விருது வழங்கப்பட்டது.



நேற்று பாக்தாத்தில் நடைபெற்ற கார்க்குண்டுத்தாக்குதலின் போது பயன்படுத்தப்பட்ட காரைப் பரிசோதிக்கும் அமெரிக்கப்படையினர். இக்குண்டுவெடிப்பில் ஆறு பேர் பலியாகினர்.

## தீவிரவாத சகோதரிகளான அரீபா-ஹனீபா தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் கைது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானிலுள்ள தற்கொலைப்படை இயக்கத்தைச் சேர்ந்த அக்கா-தங்கைகளான அரீபாவும்,ஹனீபாவும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஷியா முஸ்லிம்களின் திருவிழாவின்போது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த அவர்கள் அதை நிறை வேற்றுவதற்கு முன்பு பிடிபட்டனர்.

தீவிரவாதிகளின் சொர்க்க பூமியாகத் திகழ்கிறது பாகிஸ் தான் அங்கு பல்வேறு தீவிரவாதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

மேற்கத்திய மற்றும் அமெரிக்காவுக்கு எதிராக வன்முறைச் செயல்களில் ஈடுபடும் தீவிரவாதிகள் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகள், ஆப்கான் தீவிரவாதிகள், அரேபியத் தீவிரவாதிகள் என வகைவகையாக இருக்கிறார்கள்.

இவர்கள் தவிர இஸ்லாமிய சமுதாயத்துக்கு உள்ளேயே இருக்கும் சிறுபான்மை இனமான ஷியா முஸ்லிம்களுக்கு எதிராகச் செயல்படும் தீவிரவாதிகளும் இருக்கின்றார்கள்.

தடைசெய்யப்பட்ட ஷியா முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற் படும் இயக்கம்தான் லஸ்கர்-இ-ஜாங்பி இந்தக்குழுவுக்கு அல்-ஹைய்தா இயக்கத்தோடும் தலிபான் தீவிரவாதிகளோடும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதன் மகளிர் அணியில் அங்கம் வகிக்கும் சகோதரிகள் அரீபா-ஹனீபா.

சிறுபான்மை இனமான ஷியா முஸ்லிம் பெண்களின் திரு விழாவில் தற்கொலைத்தாக்குதல் நடத்த அரீபா-ஹனீபா சகோ தரிகள் சதித்திட்டம் தீட்டியிருந்தனர். இதுபற்றி தகவல் கிடைத் ததும் சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு பொலிசார் அவர்களைக் கைதுசெய்தனர்.

இந்த இரண்டு பெண்களும் குண்டுகள் தயாரிப்பதில் பயிற்சி பெற்றவர்கள் எனவும் தெற்கு வசீரிஸ்தானில் இந்தப் பயிற்சியை அவர்கள் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொப்பிசை பாடகர் ஜாக்சன் தற்கொலை செய்ய முயற்சியாம்!

பிரபல பொப்பிசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் 13 வயதுச் சிறுவனுடன் பாலியல் உறவு கொண்டதாக புகார் கூறப்பட்டது. இந்த வழக்கு விசாரணை கலிபோர்ணியாவின் சாந்தமரியா நீதிமன்றில் நடைபெற்று நிறைவடைந்த நிலையில் அவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இணை யதள செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்கில் சாட்சிகள் விசாரணை வக்கீல்கள் விவாதம் முடிந்த நிலையில் நீதிபதிகள் குழு ஆலோசனை நடத்தி வருகிறது. இதுவரை ஆறு நாட்கள் இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடந்தது. ஆனால் தீர்ப்புப் பற்றி எந்த முடிவும் எட்டப்படவில்லை.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை கிடைக்கும். மைக்கேல் ஜாக்சன் ஆதரவாளர்கள் அவரது வீட்டின் முன் கூடிநின்று ஆதரவுக் கோசம் எழுப்பிவருகிறார்கள்.

இந்த நிலையில் மைக்கேல் ஜாக்சன் தற்கொலை முயற்சிசெய்ததாக செய்தி பரவியது. இணையத்தின் மூலம் வாடிக்கையாளர்களுக்குசில் இச்செய்தியை அனுப்பி வருகின் றார்கள். பாலியல் வழக்கில் தண்டனைக்குப் பயந்து மைக்கேல் ஜாக்சன் தற்கொலைக்கு முயன்றார் என்றும் இணையத்தில் வரும் செய்தியைப் பார்த்து அவரது ரசிகர்கள் அதிர்ச் சியடைந்துள்ளனர்.



ஈராக்கியக் கிராமமான கிராபலாவில் கடந்த சனியன்று அமெரிக்கா நடத்தியஅகோரவிமானக்குண்டு வீச்சில் அழிக்கப்பட்ட தமது வீடுகளைப் பார்வையிடும் மக்கள்.

## அரசுக்கு எதிரான போராட்டம் அஞ்சப் போவதில்லை - அரோயோ

பிலிப்பைன்ஸில் அரசுக்கு எதிராக நடக்கும் போராட்டத்தைக் கண்டு அஞ்சமாட்டேன் என்று அதிபர் குளோரியா அரோயோ கூறியுள்ளார். கடந்த சில நாட்களாக பிலிப்பைன்ஸில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடைபெற்று வருகிறது இந்நிலையில் அங்கு ஞாயிற்றுக்கிழமை நடந்த சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பேசிய அரோயோ இவ்வாறு கூறினார்.

சுதந்திர தின நிகழ்சிகளின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் வன் முறையில் ஈடுபட்டால் அதை அடக்க தலைநகர் மணிலாவுக்கு வரும் அனைத்து நெடுஞ்சாலைகளிலும் இராணுவத்தினரை நிறுத்தி வைத்தது பிலிப்பைன்ஸ் அரசு.

# நடமாடும் சேவையூடான கிராம தரிசிப்பில் மக்களின் தேவைகள் பல இனங்காணப்பட்டன

## தேவைகள் பல தீர வழிபிறந்தது

(அலுவலக செய்தியாளர்)

**வவுனியா மாவட்டத்தின் வடக்கு பகுதியிலுள்ள கிராமங்களில் விடுதலைப்புலிகளின் துறை சார்ந்த அமைப்புக்கள் ஒன்றிணைந்து நடத்திய நடமாடும் சேவையூடான கிராமதரிசிப்பில் பொது மக்களின் தேவைகள் பல இனங்காணப்பட்டதுடன் அவற்றில் பெரும்பாலானவற்றுக்கு தீர்வுகாண வழி கிடைத்துள்ளது.**

லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையானது தமிழீழ அரசியல் துறையினரின் அனுசரணையுடன் தமிழீழ மருத்துவப் பிரிவினர், தமிழீழ சுகாதார சேவையினர், தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் ஆகியோருடன் உதவி வழங்கும் நிறுவனங்களான தமிழர் புனர்வாழ்வுக் கழகம், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர்இணைந்து கடந்த வெள்ளி,சனி ஆகிய இரு



தினங்களும் வவுனியா மாவட்ட கிராமங்களான மடத்து விழாங்குளம், கோயில் குஞ்சுக்குளம், நவ்வி, காறங்குளம், வாரியுடையார் இலுப்பைக் குளம், பனிச்சங்குளம், பாலமோட்டை, கிழவி குளம், மாதர் பனிக்கர் மகிழங்குளம் உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்டது.

இச் செயற்பாட்டின் போது மருத்துவக் குழுக்களூடான வீட்டுத் தரிசிப்பு, விசேட மருத்துவ முகாம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சேமிப்பு கடன் திட்டங்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழக போசனை உணவுப் பொருட்கள் வழங்கல், விவசாய உள்ளீடுகள் வழங்கல் ஆகியவற்றுடன் வீட்டுத் தரிசிப்பின் போது 392 வீடுகள் தரிசிக்கப்பட்டதுடன் அவ் வீடுகளில் 440 குடும்பங்களின் 1791 அங்கத்தவர்களையும், சந்தித்து அவர்களின் சுகாதார வசதிகள் ஏனைய பிரச்சினைகள் நேரில் இனங்காணப்பட்டன.

தரிசிக்கப்பட்ட குடும்பங்களில் 246 குடும்பங்கள் மலசலகூட வசதியின்மையும், 331 குடும்பங்கள் பாதுகாப்பற்ற குடிநீரை நாளாந்தம் பருகுபவர்களாகவும், 35 கர்ப்பவதிகள், 23 பாலூட்டும் தாய்மார்கள், ஏழு அங்கவீனர்கள் எட்டு உறவிழந்தோர், 6 விதவைகள், 64 பாடசாலை இடை விலகிய மாணவர்கள், 19 மன நோயால் பாதிக்கப்பட்டோர், இனங்காணப்பட்டனர்.

அத்துடன் பல் நோயால் பாதிக்கப்பட்டோர் அதிகமாகவும், நாளாந்த உணவில் இலைக் கறிவகைகள் உள்ளெடுப்போர் குறைவாகவும் இருக்கின்றனர். இங்குள்ளவர்களின் பிரதான தொழில் விவசாயமாகும். போக்குவரத்து சீரின்மையால் சந்தைப் படுத்தல் வசதியின்மையாகக் காணப்படுகின்றது. கிராமங்கள், பாடசாலைகளில் சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு பிரதேச சுகாதார இணைப்பாளரின் கண்காணிப்பிற்கும் தொடர் செயற்பாட்டிற்கும் ஒழுங்கு செய்யப்பட்டது.

அத்துடன் அரசியல் துறை துணைப் பொறுப்பாளருடைய ஒழுங்கு படுத்தலில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் போக்குவரத்துப் பேருந்து பணிக்கமர்த்த ஒழுங்கு செய்யப்படுவதாக கூறப்பட்டது.

விசேட மருத்தவ முகாமில் சிகிச்சை பெற்றோர் விபரம்:- சுவாசத் தொற்று 77, சிறுநீர் வழித் தொற்று 15, மலேரியா 2, ஆஸ்துமா 11, உயர் குருதி அமுக்கம் 8, நீரிழிவு 7, காயங்கள் 77, மூட்டு நோய்கள் 72, வலிப்பு 3, மனநோய் 1, ஆபத்தான கர்ப்பவதி 2, குருதிப்பெருக்கு நோய்கள் 2, குருதிச் சோகை



46, கண் நோய்29, தோல் நோய் 31, பல் நோய் 277, குடல் புண்கள் 11, நெஞ்சு நோ16, பிறப்பு நிறைகுறைகள் 6, காது நோய் 11, பொது நோய்கள் 84, உள்ளடங்கலாக 787 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. இறுதி நாள் நிகழ்வில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் கலந்து கொண்டு மக்களின் தேவைகள் குறித்துப் பொறுப்பாளர்களூடாக அறிந்து அவற்றிற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

# குடி நீர் கிணற்றில் எண்ணெய்க் கசிவு; பெருமளவான மக்கள் பார்வையிட்டனர்

*மன்னார் புதுக்குடியிருப்பில் அதிசய நிகழ்வு*

(மன்னார்)

மன்னார் புதுக்குடியிருப்பு கிராமத்திலுள்ள ஒரு வீட்டின் குடிநீர்க் கிணற்றில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளதை பெருமளவான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

ஜனாப் அப்துல் கனி என்பவரது வீட்டின் கிணற்றிலேயே மேற்படி எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆறாம் திகதி தொடக்கம் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு வருகின்றது.

மேற்படி நபர் தமது வீட்டுக் கிணற்றில் நீர் அள்ளச் சென்ற போது நீரின் மேற்பரப்பில் எண்ணெய் மிதப்பதைக் கண்டுள்ளார். பின்பு நீரை அள்ளி கடதாசி ஒன்றை எடுத்து அதை நனைத்து எரித்த போது மண்ணெண்ணைய் பட்டது போன்று சுடர்விட்டெரிந்துள்ளது.

ஏற்கனவே இக் கிராமத்தினை அண்மித்த பகுதியில் பெற்றோலியக் கசிவு இருப்பதாக முன்பு ஆராய்ச்சி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (18)

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த அழைப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் மக்கள் சிரமத்திற்குள்ளாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

பிரதேசத்திற்குட்பட்ட சகல பொதுச் சந்தைகளுக்குள்ளும் பிரதான வீதிகளிலும் இரவு பகலாக கட்டாக்காலி நாய்கள் பெருமளவாகவுள்ளதால் பிரதான வீதியில் செல்லும் மோட்டார் வண்டிகள் விபத்திற்குள்ளாவதுடன் பாதசாரிகளும் விபத்தில் அகப்பட்டுக் கொள்கின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் பல மாதங்களாக கட்டாக்காலி நாய் அழிப்பு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# பூநகரி சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி வழங்கல்

(பூநகரி)

பூநகரி பிரதேச சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி வழங்கப்பட்டது. கடந்த புதன்கிழமை இதன் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கென கிடைக்கப்பெற்ற மூன்று நோயாளர் காவு வண்டிகளில் ஒன்றே பூநகரி சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நோயாளர் காவு வண்டி தரித்து நிற்பதற்காக தற்காலிக கொட்டகையொன்று வைத்தியசாலை சபையினர் அமைத்து வருகின்றனர். (34)

# போராளிகளின் மன உணர்வுகளை பாதிக்கும் அதிரடிப்படை செயல்களை பொறுக்க முடியாது

*–வீரமுனை கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கண்டனம்*

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் போராளிகளை சிறிலங்கா அதிரடிப்படையினர் ஆத்திரமூட்டி வருகின்றனர். தொடர்ச்சியாக இவ்வாறு ஆத்திரமூட்டி எதிரியின் கை நீளும் போது பார்த்து சகித்துக் கொண்டிருக்க முடியாது என வீரமுனைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆதீஸ்வரன் மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

காரைதீவு அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் இரு போராளிகள் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்:- எமது போராளிகள் கஞ்சி குடிச்சாறில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அவர்களது கையில் மாதாந்த உணவுச் செலவுக்கான கணக்கறிக்கை மாத்திரமே இருந்தது.

அவ்வாறான அறிக்கை வைத்திருந்த காரணத்திற்காக அதிரடிப்படையினர் அவர்களைக் கைது செய்தவுடன் மோசமான முறையில் நடத்தியுள்ளனர்.

அவர்களது மேல் சட்டையை கழற்றிகீழே இருக்க வைத்த சம்பவம் எல்லாம் போராளிகளின் மனஉணர்வுகளைப் பாதிக்கும் சம்பவங்களாகும். அம்பாறை மாவட்டத்தில் பல தடவைகளில் அதிரடிப்படையினரால் போராளிகள் தாக்கப்பட்டுள்ளார்கள். பல சந்தர்ப்பங்களின் எமது அலுவலகங்கள் தாக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவங்கள் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டும் இன்னும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொண்டதாக தெரியவில்லை.

எனவே தொடர்ச்சியாக இவ்வாறு ஆத்திரமூட்டல் நடவடிக்கையில் படைத்தரப்பு ஈடுபடுமானால் நாம் கைகளை கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

# வவுனியாவில் கைக்குண்டுடன் ஈ.பி.டி.பி உறுப்பினர் கைது!

(செட்டிகுளம்)

ஈ.பி.டி.பி தேச விரோதக் கும்பலின் உறுப்பினர் ஒருவர் கைக்குண்டுடன் வவுனியா காமினி மகாவித்தியால யத்திற்கு முன்னால் வைத்து பொலிசாரினால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இரு தினங்களிற்கு முன்னர் கிளை மோர் தாக்குதல் இடம்பெற்ற முகாமிற்கு அண்மையிலேயே இவர் கைது செய் யப்பட்டுள்ளார். (21)

# மாதர் சங்கம நிகழ்வு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட மாதர் சங்க உறுப்பினர்களுக்கிடையிலான சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

பிரதேச மாதர் சங்கத்தலைவி விஜயலட்சுமி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்களை மல்லாவி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் செல்வி. அல்லிராணியும், யோகபுரம் மகாவித்தியாலய அதிபர் கிஷ்ணபிள்ளையும் வழங் கினர்.

இந்நிகழ்வில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துக்களை துணுக்காய் பிரதேச பொறுப்பாளர் புனிதன் வழங்கினார். இச்சங்கம நிகழ்வில் பிரதேசத்திற்குட்பட்ட மாதர் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (24)




...வில் நடைபெற்ற மாணவர் எழுச்சி நிகழ்வில் (படங்கள் ; எழிலன்)

# தமிழர் மீது யுத்தத்தைத் திணிக்கும் இனவாதிகளின் போக்கு குறித்து யாழ். பல்கலை மாணவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் ஒரு போர் ஓய்ந்து அரசியல் ரீதியாக தீர்வினைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் தமிழர்கள் இருக் கின்ற இவ்வேளையில் மீண்டும் ஒரு யுத்தத்தினை எம்மீது திணிக்கும் நோக்கோடு தென்னிலங்கைப் பேரின வாதசக்திகளின் போக்கு எமக்கு விசனத்தையும், சிறிலங்கா அரசின் மீது விரக்தி நிலையையும் தோற்றுவித்துள்ளது என நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**







சிங்கள. பௌத்த பேரினவாதப் போக்கினைக் கண்டிக்கின்றோம்.அந்தப் பேரினவாதப் போக்கினைக் கைவிட்டு எமது மக்களுக்கான நியாயமான உரிமையின் அவசியத்தினை தென் இலங்கையின் மதவெறி பிடித்தவர்களும், இனவெறி பிடித்தவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

நாட்டின் ஒரு போர் ஓய்ந்து அரசியல் ரீதியாக தீர்வினைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் தமிழர்கள் இருக்கின்ற இவ்வேளையில் மீண்டும் ஒரு யுத்தத்தினை எம்மீது திணிக்கும் நோக்கோடு தென்னிலங்கைப் பேரினவாதசக்திகளின் போக்கு எமக்கு விசனத்தையும், சிறிலங்கா அரசின் மீது விரக்தி நிலையையும் தோற்றுவித்துள்ளது.

சிறிலங்கா அரசியல் வரலாற்றில் தமிழர்களுக்கான அடக்குமுறை கடந்த காலத்தில் மொழி ரீதியாகத் திணிந்த சிங்களதேசம் தற்போது மத ரீதியான முறையில் தமிழர்களை அடக்கி சீண்ட நினைக்கின்றது. இது வெறித்தனமானதும் தமிழர்கள் மீது தமது உரிமைகளைத் தாமே தீர்மானிக்க வேண்டும் என்ற உண்மை நிலையைப் புலப்படுத்துவதாகவும் அமைகின்றது.

எந்த அரசும் தமிழர்களின் விடயத்தில் நியாயமான நிலையான தீர்வினை முன்வைக்கப்போவதில்லை. அவற்றிற்குத் தடையாக சிங்களப் பேரினவாத சக்திகள் இருக்கும் என்பதும் வரலாறு தமிழ் மக்களுக்கு உண்மையை எடுத்தியம்பியுள்ளது,

வெறுமனே கட்டமைப்பாக இருக்கும் சுனாமி மீள் கட்டுமான அமைப்பினை உருவாக்க முடியாத அரசு எவ்வாறு தமிழ்மக்களுக்கு நிரந்தரமான தீர்வினை முனவைக்கப் போகிறது? மனிதாபிமானப் பணிக்கு மதம் தடையாக இருக்கின்றது. என்றால் ஏனைய அரசியல் தீர்வுகளுக்கு எப்படி இந்த மதவாதப் போக்கு இருக்கும்?

இது இன்றைய அரசியல் கள யதார்த்தத்தினால் தமிழ் பேசும் மக்களின் மனதில் எழுந்துள்ள கேள்வி.

தமிழர்களைப் பொறுத்தவரை சிறிலங்கா அரசிடம் கையேந்தி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. எமக்கென்று பலமான படையையும், பலமான கட்டமைப்பையும், தளராத தலைவனையும் கொண்டிருக்கின்ற தமிழர்களாகிய நாம் எந்த வேளையும் எமது உரிமையை நாமே பெறக் கூடிய வலுவான நிலையில்தான் இருக்கின்றோம். இதனை சிறிலங்கா சிங்களதேசம் நன்குணர வேண்டும். எனவே பேரினவாதப் போக்கி னைக் கைவிட்டு அரசியல் தீர்விற்காக வழியமைக்க சிங்களதேசம் முன்வர வேண்டும். இல்லையேல் பொறுமையின் எல்லையில் இருக்கும் தமிழர்கள் தனித்து ஒரு முடிவு எடுக்க வேண்டிவரும். அதுவே இறுதித்தீர்வான தமிழீழம் என்ற தனி நாட்டுக்கான முடிவாகவும் அமையும் என்பதும் கண்கூடு என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# யாழ்.அரச வைத்தியசாலைகளால் மக்களுக்கு உரியசேவையை வழங்கமுடியாமைக்கு ஆளணிப்பற்றாக்குறையே பிரதான காரணம்

## -மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர்

(வடமராட்சி)

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளால் மக்களுக்கு உரிய சேவைகளை வழங்க முடியாமைக்கு பிரதான காரணமாகவுள்ளது. ஆளணிப்பற்றாக்குறையே என வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையினை அபிவிருத்தி செய்வதற்கான கலந்துரையாடலும், அபிவிருத்திக் குழுத்தெரிவும் நேற்று முன்தினம் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் தலைமையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு ஊழியர்கள் தேவை எனக் கோரினால் பிற மாவட்டங்களில் 50 பேர் தேவை எனின் 500 விண்ணப்பங்கள் வரும் ஆனால் யாழ்.மாவட்டத்தில் 50 பேர் தேவை எனின் 30 விண்ணப்பங்களே வருகின்றன. இங்கு படித்து வெளியேறும் மருத்துவர்கள் கூட இங்கு பணிபுரிய பின்னடிக்கிறார்கள். இந்நிலை மாற வேண்டும் என்றார்.

கேதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், இங்கே கலந்து கொண்டிருக்கின்ற இப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் இவ்வளவு காலமாக இவ்வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற ஊக்கமில்லாமல் இருந்துள்ளார்கள். எனவேதான் இவ்வைத்தியசாலை இன்று இந்த நிலைமையில் உள்ளது. எனவே இங்கு கலந்து கொண்டிருக்கின்ற பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளில் பலர் வைத்தியராக வேறு இடங்களில் பணிபுரிகின்றார்கள். ஆனால் சொந்தப் பிரதேசத்தில் வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை நிலவிவருகின்றது.

எனவே இங்குள்ள ஒவ்வொருவரும் எமது ஊர் எமது வைத்தியசாலை என உணர்ந்து இவ்வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய உதவவேண்டும் என்றார்.

தொடர்ந்து வைத்தியசாலை அபிவிருத்திக்குழுத்தெரிவுநடைபெற்றது. தலைவராக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி சி.கதிரவேற்பிள்ளை அவர்களும், உபதலைவராக வடமராட்சி லயன் கழகத்தைச் சேர்ந்த தணிகாசலமும், செயலாளராக வி.ஜி.தங்கவேலும், உபசெயலாளராக சுந்தரலிங்கமும், பொருளாளராக செல்வராஜாவும் மற்றும் அபிவிருத்திக்குழு உறுப்பினர்களாக ஏழு பேரும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் அபிவிருத்திக்குழு போசகர்களாக வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, கரவெட்டிப் பிரதேச செயலாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

இக்கலந்துரையாடலில் வைத்தியசாலை அபிவிருத்தியில் அக்கறை கொண்ட கல்விமான்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ், நலன்விரும்பிகள், வர்த்தகர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (கா)

# மீளக்குடியேற அனுமதிக்கக்கோரி தென்மராட்சியில் 27 இல் கண்டனப் பேரணி

(தென்மராட்சி)

தென்மராட்சிகிழக்கில் மீளக்குடியேற அனுமதிக்கக்கோரி வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை தென்மராட்சி கிழக்கு இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் மாபெரும் கண்டன எழுச்சிப் பேரணி ஒன்றை நடாத்தவுள்ளது.

தென்மராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்துவரும் மாபெரும் கண்டன எழுச்சிப் பேரணியானது உசன் கந்தசாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி கொடிகாமம் பிரதேச செயலகத்தில் மகஜர் கையளிப்புடன் நிறைவு பெறவுள்ளதாக தென்மராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

27 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணியானது ஏ. 9 பிரதான சாலைவழியாக கொடிகாமம் சென்றடையும் வரை அவ்வழியான போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்படும் என்றும், பயணிகள் இது குறித்து அறிந்து கொள்ளுமாறும் தம்மை தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கும் வரை தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (28)

# மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் இராணுவத்தால் அச்சுறுத்தல்

(தென்மராட்சி)

மிருசுவில் சாலை மறியல் போராட்டத்தில் தலைமை வகித்த கிராமப் பிரமுகர்களை சிறிலங்கா புலனாய்வுத்துறை விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் மிருசுவிலில் இடம்பெற்ற இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் சாலை மறியல் போராட்டத்தில் தலைமை வகித்த கிராம பிரமுகர்களிடம் சிறிலங்காப் புலனாய்வுத் துறை விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கியஸ்தர்களை அச்சுறுத்தி பணிய வைப்பதன் மூலமாக மக்களின் உணர்வுகளை அடக்கிவிட சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் எடுத்துவரும் இவ்வாறான பெரும் முயற்சிகளைப் பொது மக்கள் கண்டித்திருப்பதுடன், இப்படியான மிரட்டும் வகையிலான நடவடிக்கைகளைக் கண்டு தாங்கள் ஒரு போதும் அஞ்சப்போவது இல்லை என்றும், தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற எடுக்கின்ற போராட்டங்களை மேலும் தீவிரமாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (28)


# அத்வானியின் சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் விஜயம்

**இந்திய** அரசியலில் எதிர்க் கட்சிகளிடையே நிலவி வந்த சடு குடு ஆட்டம் ஓய்விற்கு வந்திருக்கின்றது. கடந்த நான்கு ஐந்து நாட்களாக ஊடகங்கள் அனைத்தும் பர பரப்பாகப் பேசிய விடயம் புஸ்வாணமாக போய் விட்டி ருக்கின்றது என்று கூறினாலும் தவறில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எல்.கே அத்வானி தூக்கிவீசி விட்டார் என்றே பரபரப்பாகப் பேசப்பட்டது. ஆனால் அது நான்கு நாட்கள் நடத்தப்பட்ட நாடகம் போன்று முடிவை அண்மித்து விட்டிருக்கின்றது. அதாவது இறுதியில் எல்லாம் சுபமாக முடிந்து விட்டிருப்பதை காண முடிகின்றது.

பாகிஸ்தானுக்கு ஆறு நாட்கள் பயணம் சென்ற அத் வானி தனது திருவாயைத் திறக்காமல் வந்திருந்தால் இவ்வளவு களேபரமும் ஏற்பட்ட வாய்ப்பே இருந்திருக்காது என்பது எதிர்க்கட்சியினரிடையே நிலவும் இரகசிய பேச்சா கும்.


அதாவது பாகிஸ்தான் சென்றோமா.. தமது ஆட்சிக் காலத்தில் கதஸ்ராஜ் இந்து கோயில் புனரமைப்பிற்கு மீண்டும் அடியிட்டோமா என்று திரும்பியிருந்தால்.. எவ் விதமான சிக்கல்களும் ஏற்பட்டிருக்கவே மாட்டாது. ஆனால் நுதலும் தன் வாயால் தனக்குத் தானே சமாதியமைப்பது




போன்றே தான் அத்வானி நடந்து கொண்டார். இதனால், விஸ்வஹிந்து பரிசத், ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புக்கள் வெகுண்டு எழுந்திருக்கின்றன.

இதனையே தான் பாரதிய ஜனதாவின் தேசிய ஜனநாயக கூட்டணியிலுள்ள கூட்டணிக் கட்சிகளும் எதிரொலிக் கின்றன. பா.ஜ.க தலைவர்கள் பலரும் மனதுக்குள் வைத்து குமைகின்றார்கள். சிலரோ சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் விழி பிதுங்கி நிற்கின்றார்கள்.

இத்துடன் இந்தச் சர்ச்சை முடிந்து விட்டதாக கூறிக் கொள்ளப்பட்டாலும் கூட இது முடிவல்ல ஆரம்பமே பது போன்றுதான் விஸ்வஹிந்து பரிசத், ஆர். எஸ்.எஸ் அமைப்பினர் தமது எதிர்ப்பைக் காட்டவுள்ளனர்




போலுள்ளது.

இல்லையேல் இல[illegible]ம் நாளையும் விஸ்வ ஹிந்து பரிசத் தனது கூட்டத்தை ஏன் அவசரமாக கூட்டவுள்ளது? அதே நேரம் இந்தக் கூட்டத்தில் அத்வானி பாகிஸ்தானில் சர்ச்சைக்குரிய விடயங்களை வெளியிட்டமை குறித்தே பிரதான விடயமாக ஆராயவுள்ளது என்று கூறப்படுகின்றது [illegible]ால் இந்த அமைப்புக்கள் அத்வானி விவகாரத்தை [illegible]ட்டு விட்டதாக எப்படிக் கொள்ள முடியும்?

பாகிஸ்தானுக்குச் சென்ற எல்.கே அத்வானி இரண்டு விடயங்களை கூறியமை பெரும் சர்ச்சையினை உசுப்பி விட்டது.

*. பாகிஸ்தான் உருவாக காரணமாக இருந்த முகம்மது ஜின்னா மதசார்பற்றவர்.

*. பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாள் தனது வாழ்வில் துக்கமான நாள்.

இந்த விடயமே கிசுகிசுவென பாரதிய ஜனதாக் கட்சியை மட்டுமல்ல ஆளும் கட்சியையும் கிளர்ந்தெழ வைத்து விட்டது எனலாம். ஆனால் எதிர்க்கட்சியே தமக்கிடையே போர்க் கொடி தூக்கியதையடுத்து ஆளும் கட்சி மௌனம் சாதித்து விட்டது என்றே தான் கூற வேண்டும்.

*யார் இந்த முகம்மது அலி ஜின்னா...? ஜின்னா செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் மட்டுமல்ல பிரபல்யமான வழக் கறிஞரும் கூட 1905 இல் ஜின்னா இந்திய தேசிய காங்கிர சில் சேர்ந்து கொண்டார். அதன் பின்னர் இந்தியா முழுவதும் சிதறிக் கிடந்த முஸ்லிம்களை நோக்கியே அவரது கவனம் திசை திரும்பியது. பம்பாய் முஸ்லிம் லீக் கிளைப் பொறுப்பையும் வேறாம் ரூல் இயக்கப் பொறுப்பையும், ஒன்றாக நிர்வகித்த பெருமையினை தனதாக்கிக் கொண்ட வர்.*

*1890 இல் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் 702 பிரதிநிதிகள் பங்கு கொண்ட போது இதில் 156 பேர் முஸ்லிம் பிரதி நிதிகள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆனால் 1905 இல் இந்த எண்ணிக்கை வெறும் 17 ஆன போது ஜின்னா தவித்துப் போய் விட்டார். முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக அவர் அப்போதே சிந்தித்திருக்க முடியும்.*

*முஸ்லிம்களுக்கான தனிநாட்டுக் கரு அவர் மனதில் முளை விட்டிருக்கவும் கூடும். ஏனெனில் இதனையடுத்தே அடுத்து வந்த மக்களவைத் தேர்தலில் முஸ்லிம் வாக்குகள் மூலம் 1909 இல் பாராளுமன்றத்தினுள் பிரவேசித்தார். 1947 வரை மந்திரி பதவியை வகித்திருக்கின்றார்.*

*1940 இல் லாகூரில் நடந்த மாநாட்டில் முஸ்லிம்களுக்கு தனி நாடு வேண்டும் எனும் கோஷத்தை முன் எழும்பினார். இதனையடுத்து இவரது தொடர் அழுத்தம் காரணமாக 1947 ஓகஸ்ட் 14இல் முஸ்லிம்களின் தனி நாடாக பாகிஸ் தான் உதயமாகியது.*

எனவே பாகிஸ்தானின் தந்தை என்றே வர்ணிக்கப் பட்டவர் ஜின்னா. ஆனால் இந்தியா ஜின்னாவை துரோகி யாகவே பார்த்தது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் என்று ஒரு பகுதியைப் பிரித்தெடுத்தமை காரணமாகவே தான் இந்தியா அவரைத் துரோகி என முத்திரையிட்டது. எனவே காலம் காலமாக ஜின்னாவை வில்லனாகவே தான் காங்கிரஸ் கட்சியும் சரி பாரதீய ஜனதாக் கட்சியும் சரி பார்த்து வந்திருக்கின்றது.

இந்த நிலையில் தான் பாகிஸ்தான் சென்ற எல்.கே அத்வானி முகம்மது ஜின்னா சமாதிக்கு சென்றதுடன் நில் லாமல் ஜின்னா மதச்சார்பற்றவர் என்று கூறிக்கொண்டார்.

அது மட்டுமன்றி முஷாரப்புடன் உரையாடும் போது பாபர்மசூதி தகர்ப்பு நாள் தனது வாழ்வில் மிகவும் துயரமான நாள் என்று தன்னை முஸ்லிம்களின் அனுதாபியாகவும் காட்டிக் கொள்ளவும் முற்பட்டார்.

இதனையடுத்து அவர் இந்தியா வருவதற்கு முன்பே அவர் கூறிய விடயங்கள் இங்கே பெரும் அமளியை, சர்ச்சையை உருவாக்கி விட்டது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் தமது தலையை தாமே பிய்த்துக் கொள்ளும் நிலையை உருவாக்கிய அத்வானி, இந்தியா திரும்பினார். விஸ்வ ஹிந்து பரிசத், ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் 'துரோகி' என்று அதவானியை சாபமிட்டனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அத்வானி லாயக்கில்லாத வர் என்று போர்க் கொடி தூக்கினர்.

பா.ஜ.தலைமைக்கு வயதானவர்கள் பொருத்தமானவர்கள் அல்ல. அவர்கள் எல்லோரும் ஒதுங்கி இன்றைய தலைமுறைக்கு வழிவிட வேண்டுமென்று விஸ்வஹிந்து பரிசத் கூறியிருக்கின்றது. அன்று தொடக்கம் அத்வானியும் விஸ்வஹிந்து பரிசத்தும் கீரியும் பாம்புமாகி விட்டது என்பது வெளிப்படாத உண்மைகள்.


ஏற்கனவே வாஜ்பாய் பாரதிய ஜனதா தலைமை பதவியிலிருந்து விலகி விட்டார். அத்வானி அந்த இடத்தை நிரப்பிக் கொண்டார். இதனை விஸ்வஹிந்து பரிசத் அமைப்பு விரும்பவில்லை. எப்பொழுது அத்வானிக்கு சுருக்கிடலாம் என்று காத்திருந்தவேளை அத்வானியே கயிற்றை எடுத்துக் கொடுப்பது போன்று நிலைமைகள் அரங்கேறி விட்டன.

எது எப்படியோ.... அத்வானி தனது பதவியை இராஜி னாமா செய்து மீண்டும் வாபஸ் பெற்றிருக்கின்றார். இதற்காக அவர் நிபந்தனையும் விதித்திருக்கின்றார். பாகிஸ் தானில் தான் கூறிய விடயங்களை பா.ஜ.க ஆட்சி மன்றக் குழு ஏற்றுக் கொள்வதாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டு மென்பதே அதுவாகும்.

இதற்கு முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முரளி மனோகர் ஷோஜி போன்றவர்கள் உடன்படவில்லை. வாஜ்பாய் மௌ னமாக நிராகரித்தார். முரளி மனோகர் ஷோஜியோ பெரும் குரலெடுத்து சத்தம் போட்டிருக்கின்றார்.

ஆக... அத்வானிக்கு கட்சிக்குள்ளேயே ஆதரவு குறைந்த வருகின்றது என்று தான் கூறவேண்டிருக்கின்றது.

அத்துடன் அத்வானியின் நிபந்தனையினையும், கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்று தான் அதையும் நம்பத் தோன்றுகின்றது. பா.ஜ.க ஆட்சி மன்றத்தால் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தில் அத்வானி கதஸ்ராஜ் இந்துக் கோயில் புனரமைப்பிற்கு மீண்டும் அடிகோலிட்ட விடயம். பாராட்டப்பட்டிருக்கின்றதே தவிர ஜின்னா குறித்த கட்சியின் ஏகோபித்த முடிவில் மாற்றம் ஏற்பட துளியும் இடமில்லை. இதன் மூலம் மறைமுகமாக அத்வானிக்கு பாடம்புகட்டப்




பட்டிருக்கின்றது.

இதேவேளை பாரதியஜனதா ஆட்சியின் போது அத்வானி பாகிஸ்தான் பக்கமே எட்டிப் பார்க்காதவர் ஏன் இப்போது பாகிஸ்தான் சென்றார்..? தமது ஆட்சிக் காலத்தில் ஜின்னா குறித்தும் பாபர் மசூதி குறித்தும் கவலை வெளி யிட்டிருக்கலாமே.. எல்லாமே அரசியலில் புகழைத் தேடிக் கொள்வதற்காகத் தான் என்பது ஆளும் கட்சியின் எள்ளி நகையாடலாகவுள்ளது.




அது மட்டுமன்றி ரத யாத்திரை தொடங்கியவர் அத்வானிதான்! இரவோடிரவாக பாபர் மசூதியை தகர்த் தெறிந்தும் அத்வானியே தான்! இப்படி இருக்கும் போது பாபர் மசூதி தகர்ப்பு நாள் தனது வாழ்வில் துக்க நாள் என்று அத்வானி நீலிக் கண்ணீர் வடிப்பது அரசியலில் முஸ்லிம்களின் ஆதரவைப் பெறத்தானேயன்றியே தவிர

அ.கலைவாணி

வேறொன்றுமில்லை என்பது ஒரு சாரார் கருத்து.

அத்துடன் பாபர் மசூதியை தகர்த்ததன் மூலம் தான் துணைப் பிரதமரானவர் அத்வானி. இன்று அதே பாபர் மசூதியை கலைக் கூடமாக்கி அதன் மூலம் மீண்டும் தனது செல்வாக்கை உயாத்த அடிகோலுவதாகவும் விமர்சனம் எழுந்திருக்கின்றது.

என்றாலும், இந்தியாவிலிந்து பாகிஸ்தான் பிரிந்து தனி நாடாக உருவானமைக்கும், இன்று காஷ்மீர் விவகாரம் உலளகளவில் பேசப்படுவதற்கும் ஜின்னா தான் அடித்தளமிட்டவர் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

ஏனெனில் பாகிஸ்தான் தனி நாடு ஆகாது இருக்கும் பட்சத்தில் காஷ்மீர் இரண்டு பட்டிருக்க வாய்ப்பில்லை. தீவிரவாதம் இன்று எல்லை கடந்து விட்டதாக கூறுவதற்கு சந்தர்ப்பமில்லை. இன்று காஷ்மீர் பிரச்சினைக்குரிய இடமாக முத்திரைபொறிக்கவும் வசதி ஏற்பட்டிருக்காது என்பது இந்தியாவில் காலம் காலமாக ஆளும் தரப்பால் முன் வைக்கப்படும் கருத்தாகும்.

இந்த நிலையில் அத்வானியின் விமர்சனம் கேலிக் கூத்தாகவே தான் கருதப்படுகின்றது. எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு தனது புகழை வாஜ்பாயின் உயரத்திற்கு உயர்த்த நினைத்த அத்வானி அதல பாதாளத்தில் விழுந்து விட்டிருக்கிறார் என்றால் மிகையில்லை.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கௌரவத் தொடர் என வர்ணிக்கப்படும் "ஆஷஸ்" கிரிக்கெட் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு மாதமே எஞ்சியுள்ளது.

கடந்த 18 ஆண்டுகளாக இங்கிலாந்து அணிக்கு தண்ணி காட்டிவிட்டு தொடர்ந்தும் ஆஷஸ் கோப்பையை தக்க வைத்துள்ளது அவுஸ்திரேலியா. இந்த நிலையில் இம்முறை யார் வெல்வார்கள் என்று அறுதியிட்டு கூறிவிட முடியாது. அதை ஒரு பக்கம் வைத்து விட்டு அவுஸ். அணியின் முன்னணி வீரர் கள் சிலர் சாதனை கனவோடு இங்கிலாந்து மண்ணில் காலடி வைத்துள்ளமை தான் சிறப்பு.

சீரான ஓட்டம், துல்லியமான பந்து வீச்சு, எதிரணி வீரர் களின் பலவீனம் அறிந்து பந்து வீசுதல், இப்படி சொல்லிக் கொண்டுபோனால் யாரை சொல்ல வருகிறோம் என்பது உங்களுக்கு புரிந்திருக்கும். கிளென் மெக்ராத் அவுஸ் அணி யின் நம்பிக்கையான பந்து வீச்சாளர். 109 டெஸ்டில் 499 விக்கெட்டை வீழ்த்தியுள்ளார். ஒரே ஒரு விக்கெட்டை வீழ்த்தினால் 500 விக்கெட் என்ற மைல் கல்லை எட்டலாம். ஸ்ரோஸ், ரெஸ்கொதிக், வோன் இப்படி யாரை தனது 500 ஆவது விக் கெட்டாக வீழ்த்தலாம். என்று பட்டியல் போட்டு லோட்ஸ் மைதான மண்ணை மிதிக்க காத்திருக்கிறார். இவரை பாராட்ட மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி என உறவினர் படையே லண்டன் வருகின்றதாம். இந்த சாதனை நிகழ்த்தினால். மேற்கிந்தியத்தீவின் வோல்சுக்கு (519) பின் இந்த மைல்கல்லை எட்டிய இரண்டாவது வேகப் பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெறலாம். இதனை விட அவுஸ் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் 123 டெஸ்டில் ஆடி 583 விக்கெட் வீழ்த்தி யுள்ளார். இந்தத் தொடரில் அவர் 600 விக்கெட் வீழ்த்தும் நம்பிக்கையிலுள்ளார். விக்கெட் சராசரிப்படி போட்டி ஒன்றுக்கு இவர் ஐந்து விக்கெட் (4.75) வீழ்த் தியுள்ளார். அணியில் கட்டாயம் இடம் பெறு வார் என்ற நிலையில் ஐந்து போட்டியில் 17 விக்கெட் வீழ்த்துவதில் சிரமம் எதுவும் அவருக்கு இருக்கமாட்டாது. இங்கிலாந்து அணிக்கு எப்போ தும் இவ ரது பந்து வீச்சு சிம்ம சொப்பனமாக இருக்கும்.

## சாதனை நோக்கிய




அத்துடன் விக்கெட்காப்பாளர் கில்கிறிஸ்ட் விக்கெட் வேட்டை கனவோடு இங்கிலாந்து சென்றுள்ளார். இவர் எப்போது பந்து வீசத் தொடங்கினார் என்று நினைத்து விடா தீர்கள். 68 டெஸ்டில் விக்கெட்காப்பாளராக பணியாற்றி இதுவரை 287 வீரர் கள் (260 பிடி எடுப்புக் களையும், 27 ஸ்டம்பிங்) ஆட்டமிழக்கக் காரணமாக இருந்துள்ளார். இன்னும் 13 பேரை ஆட்டமிழக்கச் செய்தால் இயன் ஹீலி (395), ரோட்னி மார்ஹ் (355), பவுச்சர் (323) வரிசையில் 300 வீரர்களை வீழ்த்த காரணமான நான் காவது வீரர் என்ற பெருமையை பெறுவார். தென்னாபிரிக் காவின் பவுச்சரை நீக்கி பார்த்தால் இந்த சாதனை நிகழ்த்தும் மூன்றாவது அவுஸ் வீரர் என்ற புகழும் இவரைச் சேரும் இன்னும் இரண்டு மூன்று ஆண்டு கள் அணியில் நீடிக்கும் பட்சத்தில் ஹீலியின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்புள்ளது.

மற்றொருவர் மெக்ராத்துடன் இணைந்து பந்து வீசும் ஜேசன் கிலஸ்பி ஒரு சிறிய சாதனைக்காக காத்திருக்கின்றார். 66 டெஸ்டில் விளையாடி 248 விக்கெட்டுக் களை வீழ்த்தியுள் ளார். 250 விக்கெட்டை எட்ட தேவையான இரண்டு இங்கிலாந்து வீரர்கள் யார் என்பதை எதிர்பார்த்துள்ளார். இந்த சாதனையை அவர் எட்டுவார்.

இந்த நால்வரோடு 2001, 2002, 2003, 2004 என தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக ஆயிரம் ஓட்டங்களை கடந்து சாதித் துள்ள ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஹெய் டன். இந்த தொடரில்எனது துடுப்பு நிதான மாக சாதிக்கும் என ஏற்கனவே உறுதி யளித்துள்ளார். ஐந்து போட்டிகள் என்பதால் குறைந்தபட்சம் 400-500 ஓட்டங் களை இலக்காகக் கொண்டு ஹெய்டன் களமிறங்குவார் என அவுஸ். தரப்பு நம்பிக்கை தெரிவிக்கிறது.

போட்டியின் போது காயம், மழை இப்படி சோதனைகள் நடக்காத பட்சத்தில் மேற் கூறிய அனைத்து சாதனை களை யும் அவுஸ்வீரர்கள்கட்டாயம் நிகழ்த்துவார்கள் என உறுதி யாக நம்பலாம்.

---

அதிபார குத்துச்சண்டை போட்டியில் சில வருடங்களின் முன் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த அமெரிக்காவின் "மாமிசமலை" மைக் டைசன் குத்துச் சண்டை களத்திலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

தனது சொந்த மண்ணில் நடைபெற்ற அயர்லாந்து நாட்டவரான கெவின் மைக் பிரைட்டுட னான போட்டியின் போது சுருண்டு வீழ்ந்த டைசன் மேற்படி அறிவித்தலை விடுத்தார்.

இரண்டு முறை அதிபார குத்தச் சண்டை போட்டியில் சம்பியனான டைசனுக்கு தற்போது 38 வயது. குத்துச் சண்டையில் எப்படி உலகப் புகழ்பெற்று பரபரப்பு ஏற்படுத்தினாரோ அதே



போல டைசன் அடிதடி, பாலியல் பிரச் சினைகளிலும் சிக்கிபரபரப்பை ஏற் படுத்தியவர். ஒருமுறை தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஹோலி பீல்ட்டின் காதை கடித்து சர்ச்சையில் மாட்டியவர் இன்னொரு முறை தன்னை எதிர்த்து போட்டி யிட்ட லெனாக்ஸ் லூயிஸ் காதை கடித்து இரத்தம் வரச்செய்தார்.


இதனைத் தொடர்ந்து வெற்றி முகத்தில் சென்று கொண்டிருந்த டைசன் குத்துச் சண்டை களத்தில் சரிவை சந்திக்க தொடங்கினார். லெனாக்ஸ் லூயிஸ் டேனி வில்லி யஸ் போன்றவர்களிடம் டைசன் தோல்வி கண்டார்.

இதன்பின் சிறிதுகாலம் போட்டி களில் கலந்து கொள்ளாது ஒதுங்கிவந்தார்.

இந்த நிலையில் மீண்டும் களமிறங்கும் ஆசை டைசனுக்கு ஏற்பட்டது. அயர்லாந்து வீரர் கெவின் மைக் பிரட்டுடன் (வயது 32) மோதப் போவதாக டைசன் அறிவித்தார்.

## முடிவுக்கு வந்த சகாப்தம்

இதன்படி போட்டி நேற்று முன்தினம் வோஷிங்டனில் ஆரம்பமானது ஏராளமான ரசிகர்கள் முன்னணியில் நடைபெற்ற இப்போட்டியில் ஆரம்பத்தில் டைசன் தனது வழக்கமான ஆக்ரோஷமான தொடக்கத்தை ஆரம்பித்தார். அவர் ஆரம்பத்தில் விட்ட குத்து கெவினின் இடது கண்ணைப் பதம் பார்த்தது. இது டைசனுக்கும் டைசன் ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சி அளித்தபோதும் சுதாகரித்துக் கொண்ட கெவின் திருப்பி தாக்கி டைசனை கதிகலங்க வைத்தார். ஐந்தாவது சுற்றிலேயே அவர் தடுமாறினார். ஆறாவது சுற் றில் அவரால் தாக்குப்பிடிக்க முடிய வில்லை. தொடர்ந்து கெவின் விட்ட அதிரடி குத்து டைசன் முகத்தில் பாய மைதானத்தில் சுருண்டு வீழ்ந் தார் டைசன். நடுவர் ஒன்று இரண்டு மூன்று என்று பத்து முறை எண் ணிய போதும் டைசனால் எழுந்து நிற்க முடியவில்லை.



எனவே ஆறாவது சுற்றில் கெவின மைக் பிரைட் 57-55 புள்ளிகளில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட் டார். இதனால் இழந்த பெரு மையை மீண்டும் பெற களமிறங்கிய டைசன் ஏமாற்றமடைந்தார். இறுதியில் இதுவே எனது கடைசிப் போட்டியாக இருக்கும். குத்துச் சண்டையில் இனியும் என்னால் சாதிக்க முடியாது எனக் கூறி ஓய்வை அறிவித்தார். 44 முதற் சுற்று வெற்றிகள் உட்பட 50 வெற்றிகள் பெற் றுள்ள டைசன் ஆறு தடவைகள் தோல்வி அடைந்துள்ளார். தோல்வி அடைந்தாலும் டைசனுக்கு போட்டியில் பங்கேற்றதற்காக பங்கு தொகையாக 90 கோடி ரூபா வழங்கப்பட்டது. இப்போட்டியின் வெற்றி குறித்து கெவின் மைக் பிரைட் கூறும் போது இது எனது நாட்டுக்கு கிடைத்த வெற்றி என்றார்.

---

உலகின் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் அவுஸ்திரேலிய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் இன்னும் சில தினங்களில் இங்கிலாந்து மண்ணில் ஆரம்பமாகவுள்ளன.



கிரிக்கெட்டின் பிறப்பிடங்களாகக் கருதப்படும் இவ்விரு நாடுகளுக்கிடையிலான போட்டிகள் காலத்துக்குக்காலம் விறுவிறுப்பை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக ஆஷஸ் கிண்ணத்துக் கான மோதலை கூறலாம். இந்த கிண்ணத்துக்கான போட்டிகள் இதுவரை நடைபெற்று வந்துள்ள போதிலும் இவ்வருடம் நடைபெறவுள்ள போட்டிகள் மிகமிக விறுவிறுப்பையும் திகிலையும்ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## போரா? போட்டியா?

அதாவது டெஸ்ட் கிரிக்கெட்டிலும் ஒரு நாள் போட்டிகளிலும் உலக தரவரிசையில் தொடர்ந்து முன்னிலை வகித்து வரும் அவுஸ்திரேலியாவுக்கு இப்போட்டித் தொடர் அச்சுறுத்தல் நிறைந்ததாகவே காணப்படும். இதனை அவுஸ்திரேலிய அணித்தலைவர் றிக்கி பொண்டிங்கே வாய்திறந்து கூறியுள்ளார். அத்துடன் சில இங்கிலாந்து வீரர்களின் செயற்றிறனையும் அவர் பாராட்டத்தவறவில்லை. இதற்குக் காரணம் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோனின் கீழ் செயற்படும் வீரர்களின் அண்மைக்கால திறன் வெளிப்பாடாகும். அந்த அணியின் அன்ரு பிளின்டொப்பின் துடுப்பாட்டமும், பந்து வீச்சும் அவுஸ்திரேலியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என பொண்டிங் தெரிவித்துள்ளார். அதேவேளை அன்றூஸ்ரோஸ், கெவின் பீற்றர்சன், ரெஸ்கொத்திக், மைக்கல் வோன் ஆகியோரின் துடுப்பாட்டம் ஸ்டீவ் ஹமிசன் மத்தியு ஹோகாட், அஸ்லி கைல்ஸ் ஆகியோரின் பந்து வீச்சும் அவுஸ்திரேலிய அணிக்கு எவ்வாறேனும் அச்சுறுத்தலாகவே இருக்கும்.

இந்த உண்மையை நிரூபிக்கும் வகையில் இந்தப் போட்டித்தொடரில் இடம் பிடிக்கவென கவுண்டி போட்டிகளில் பங்கேற்று தனது திறமையை வெளிக்காட்ட மேற்படி வீரர்கள் முயன்று வருகின்றனர். இதில் ஹர்மி சன், ஹட்றிக் சாதனை நிகழ்த்தியதும் குறிப்பிடத் தக்கது.



ஆயினும் ஹட்றிக் சாதனை அவுஸ்திரேலிய வீர்க ளான கில்கிறிஸ்ட், பொண்டிங், கெய்டன், மார்ட்டின் என் பவர்களிடம் செல்லு படியாகுமா என்பதும் சந்தேகமே. அதை விட இங்கிலாந்தின் சகல துறைவீர் பிளின்டொப் போன்றே அவுஸ்திரேலியாவிலும் மைக்கல் கிளார்க் திகழ்கின்றார். அத்துடன் கிளன் மெக்ராத், பிரட்லி, கஸ்பரோவிச், கிலஸ்பி ஆகியோரும் இங்கிலாந்து துடுப்பாட்டவரிசையில் தீவிரமாக கண் வைத்துள்ளனர்.

இதேவேளை தொடர்ந்து அவுஸ் திரேலிய அணி ஆஷஸ்கிண்ணத்தை தக்க வைத்துக்கொண்டு வரும் நிலையில் அதனைப் பறிகொடுத்த அணித்தலைவராக தான்இருக்க மாட்டார் என றிக்கிபொண்டிங் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.ஆனால் இதுவரை வழிநடத்திய அணித்தலைவர்களை விட சற்றுமுன்னேற்றம் கண்டு டெஸ்ட் தரவரிசையில் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ள இங்கிலாந்து அணித்தலைவரும் வீரர்களும் வரலாற்றை மாற்றியமைக்க கங்கணம் கட்டியுள்ளனர்.

இதற்கான பலப்பரீட்சை இன்னும் சில வாரங்களில் நடைபெறவிருப்பினும் நாளை மறுதினம் ஆரம்பமாகும் நட்வெஸ்ட் கிண்ண முக்கோணத் தொடரில் பங்களாதேஷ் அணி கலந்து கொள்கின்ற போதும் மேற்படி சமபலமிக்க அணிகள் ஒருநாள் தொடரில் காட்டும் திறன் ஆஷஸ் கிண்ணம் பறிகொடுக்கப்படுமா? தக்க வைக்கப்படுமா என்பதற்கு ஓரளவேனும் விடை கூறுவதாக இருக்கும்.

# ஜே.வி.பி.யுடன் எத்தகைய கூட்டினையும் ஐ.தே.க செய்து கொள்ளமாட்டாது

## -திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் எத்தகைய அரசியல் கூட்டிற்கும் அறவே இடம் கிடையாது எனவும் தேசிய பிரச்சினைகளில் நியாயமான நிலைப்பாட்டை எடுக்க முடியாத ஒரு கட்சியுடன் கூட்டுச் சேர்வது என்பது எமக்கு நாமே குழி பறித்துக்கொள்வது போன்றதெனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

காலியில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க எந்த நேரத்திலும் பொதுத்தேர்தல் வரலாம் எனவும் அதனை வெற்றி கொள்ளும் விதத்தில் ஜே.வி.பி. புதிய அரசியல் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்தவிருப்பதாகவும் குறிப்பிட்டதோடு, அதற்காக தாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கவுடன் ஊடகம் ஒன்று தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனை முற்றாக நிராகரித்திருக்கிறார்.

# ராஜபக்ஷதான் சனாதிபதி வேட்பாளர்; சந்திரிகா உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தான் ஆளும் மக்கள் சுதந்திரக் கூட்டணியின் சனாதிபதி வேட்பாளர் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த திங்கட்கிழமையன்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடத்திய நீண்ட நேர ஆலோசனையின்போது இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தான் எதிர்க்கட்சித் தலைவராகவும், பிரதமராகவும் இருந்து சனாதிபதியானது போல் உங்களையும் சனாதிபதி ஆக்குகின்றேன். ஆனால், இதர அரசியல் கட்சிகள் விமர்சிப்பதற்கு நீங்கள் இடமளிக்கக்கூடாது என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ராஜபக்ஷவிடம் கூறியதாகவும் அச்செய்திகள் கூறுகின்றன. மகிந்த ராஜபக்ஷதான் சனாதிபதி வேட்பாளர் என்பதை தம்மைச் சந்தித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் போது சனாதிபதி வேட்பாளராக சந்திரிகாவால் அறிவிக்கப்படக்கூடும் என்று கூறப்பட்ட சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவும் உடனிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பது புத்திசாலித்தனமான செயல் அல்ல

## -அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்ததேரர்

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்பில் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான விடயங்கள் எதுவும் இல்லை என்பதால் இது பற்றி அச்சப்பட வேண்டிய தேவை இல்லை. இந்நிலையில் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது புத்திசாலித்தனமானது அல்ல என்று அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்ததேரர் கூறியுள்ளார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், ஏனைய பௌத்த பீடாதிபதிகளுக்குமிடையில் நடந்த சந்திப்பில் கலந்து கொள்ளாத குறிப்பிட்ட தேரர் சனிக்கிழமை சனாதிபதியைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் உத்தேச பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சனாதிபதி அளித்த விளக்கம் பற்றி அவர் கூறியதாவது;

நாடு பிளவுபடாத வகையில் வடக்கு கிழக்கு மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் சனாதிபதி இருக்கின்றார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் இன, மத பேதமின்றி நிவாரணம் அளிக்கப்பட வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இந்தக்கட்டமைப்பில் அரசாங்க அதிபர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய சமூக பிரமுகர்கள், சிவில் அதிகாரிகள் எனப் பலரும் இடம் பெறுகின்றார்கள். அது மட்டுமன்றி நிதி அமைச்சு ஊடாகவே அபிவிருத்திக்கான நிதி வழங்கப்படும் என்பதால் இதனை எதிர்க்க வேண்டிய தேவை இல்லை. குறிப்பிட்ட விடயமானது நாட்டிற்கு பாரதூரமானது அல்ல என்றார் அவர்.

# பொலிசாரின் நடவடிக்கைக்கு பயந்தே தேரர் உண்ணாவிரதத்தை கைவிட்டார்!

மகாநாயக்கர்களுடன் ஆலோசனை நடத்திய பின்பே பொதுக்கட்டமைப்பில் தான் கையெழுத்திடுவேன் என்று சனாதிபதி சந்திரிகா அளித்த உறுதிமொழியையேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒமல்பே சோபிததேரர் கைவிட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் பொலிசாரின் நடவடிக்கைக்கு அச்சமடைந்தே ஒமல்பே சோபித தேரர் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டதாக கொழும்பு பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய தேரரை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த பொலிசார் நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனராம்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான இந்த நடவடிக்கைக்காக கண்டி நீதிமன்ற நீதிபதியின் அனுமதியையும் வெள்ளிக்கிழமை இரவே கண்டி பொலிசார் பெற்றிருந்தனர்.

கலவரம் அடக்கும் குழு உள்ளிட்டவர்களுடன் தேரர் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு பொலிசார் செல்வதற்கு முன்னதாகவே தேரர் உண்ணாவிரதத்தை கைவிட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டதால் தாம் அத்தகைய நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்று பொலிசார் கூறினர். சனாதிபதியின் இதே உறுதிமொழியைத்தான் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் ஒமல்பேசோபித தேரரிடம் சில நாட்களுக்கு முன்பு அளித்தனர். ஆனால் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடமாட்டேன் என்று அறிவித்தால் தான் சாகும்வரையான உண்ணாவிரதப்போராட்டத்தைக் கைவிடுவேன் என்று ஒமல்பே சோபிததேரர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# திடீர் தேர்தல் நடத்தப்பட்டால் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்!

## -தேர்தல் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தினைக் கலைத்து அரசு திடீர் தேர்தலை அறிவிக்கும் பட்சத்தில் அத்தேர்தல் 2004 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலின்படியே நடத்தப்படவேண்டும். அப்பட்டியலுக்கு ஏற்ப பொதுத் தேர்தல் நடத்தப்படுமானால் பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவின் ஆலோசனைக்கமைய தேர்தல் திணைக்களம் பொதுத்தேர்தல் ஒன்றுக்கான அவசர ஆரம்பப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய தேர்தல் திணைக்களம் வாக்காளர் பட்டியலை தயார்படுத்துவது, பொதுத்தேர்தலுக்கான அவசியத் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய கட்டமைப்புக்களை தயாரிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.


## முச்சக்கரவண்டி உரிமையாளர் கவனத்திற்கு

எமது சங்கத்தில் பதிவு செய்து தங்களுக்கு வழங்கப்பட்ட தரிப்பிடங்களுக்கு வருகை தராமல் இருப்பவர்களும் முச்சக்கர வண்டிகளை விற்று தரிப்பிடப் பதிவு வைத்திருப்பவர்களும் எதிர்வரும் 20.06.2005 திகதிக்கு முன் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*செயலாளர்*
*மு.ச.வ உரிமையாளர் சங்கம்*
*கிளி.மாவட்டம்*

(6260)



## ஆண்டிரண்டிலும் ஆறாத நினைவலைகள்...

அன்னையவள் மடியதனில்:-14-02-1980

சர்வதேசக் கடற்பரப்பில்:-14-06-2003



ஆண்டிரண்டு போனபின்னும்
ஆறவில்லை எம் இதயம்
இன்றுவரை நம்பவில்லை-நீங்கள்
இல்லை என்று இயம்புவதை

வாழ்ந்திடும் காலமெல்லாம்
வசந்தமுடன் வாழ எண்ண
இறையவனும் இடைவழியில்-எம்
இதயந்தனை பிரித்ததென்ன?

பெருகி வழியும் கண்ணீரில்
வாழ்கின்றோம் வாழ்வதனை
வருந்தி நாம் அழைத்திடினும்
வருவீரோ எம்மிடத்தே?

அன்பான அம்மாவை
ஆசை அக்கா, தங்கைதனை
பரிதவிக்க விட்டு விட்டு

நீங்கள் இன்று சொர்க்கத்தில்
நாம் உழல்கின்றோம் நரகத்தில்!

பாசத்தின் முழு உருவம்-அது
உங்களது முழு வடிவம்
பாதியில் அறுந்ததெண்ணி-இன்று
பதறுகிறோம் எண்ணியெண்ணி

உங்களின் அழகுவிழியதனை
சிரித்திடும் இளம் புன்னகையை
நாம் இன்று காண்கின்றோம்-உங்கள்
மருமகளின் மழலையினில்...

எங்கள் ஜீவன் இருக்கும் வரை
உங்கள் மூச்சின் சுவாசம் கொண்டு
நாள் தோறும் வாழ்ந்திடுவோம்-உங்கள்
நினைவதனை சுமந்து கொண்டு---!

இவருடன் வீரச்சாவடைந்த 11 "மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

கடற்புலி மேஜர் நிர்மலன்

ரணராஜா-ரகுநாத்

[நெடியகாடு வல்வெட்டித்துறை]

இல:40,றெட்பானா சந்தி
விசுவமடு.

(6262)

*கரைகின்ற கண்ணீரில் வாழும்*
*அன்பு அம்மா,*
*ஆசை அக்கா,அத்தான்,*
*மருமகள் அபிக்குட்டி,*
*பாசமுடன் தங்கை.*



குஜராத்தில் இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நடந்த இந்திய எல்லை பாதுகாப்புப் படை தினவிழாவில் பள்ளி மாணவர்களுடன் ஒரு வீரர் பேசிக்கொண்டு இருந்தபோது...

# கோவாவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கிறது

கோவாவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைக்கிறது. புதிய முதல்மந்திரியாக பிரதாப் சிங்ரானே ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சனாதிபதி ஆட்சி அமுலில் இருந்து வந்த கோவா மாநிலத்தில் ஐந்து சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் மூன்று தொகுதிகளில் காங்கிரசும், ஒரு தொகுதியில் அதன் கூட்டணிக் கட்சியான தேசியவாத காங்கிரசும் வெற்றி பெற்றது. ஒரு தொகுதியில் மட்டுமே பா.ஜனதா வெற்றி பெற்றது.

இதன் மூலம் 39 உறுப்பினர் கொண்ட கோவா சட்டசபையில் காங்கிரஸ் கூட்டணியின் பலம் 21 ஆக உயர்ந்துள்ளது. இதனால் முடக்கி வைக்கப்பட்டுள்ள கோவா சட்டசபையில் காங்கிரஸ் கூட்டணிக்கு ஆட்சி அமைக்க பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது.

# பட்டோடியை பிடிக்க பொலிசார் வலைவீச்சு

பட்டோடியைப் பிடிக்க பொலிசார் டில்லி, அரியானா உத்தரப்பிரதேச மாநிலங்களில் வலைவீசித் தேடுகிறார்கள். இந்திய கிரிக்கெட் முன்னாள் கப்டன் மன்சூர் அலிகான் பட்டோடி, அரியானா மாநில காட்டுப்பகுதியில் மான்களை வேட்டையாடிக் கொன்றதாக பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். பட்டோடி மற்றும் ஏழு பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் மதன்சிங் என்பவர் மட்டும் பொலிசில் சிக்கியுள்ளார். பட்டோடி உட்பட மற்ற ஏழு பேரும் தலைமறைவாகவுள்ளனர்.

பட்டோடியைப் பிடிக்க டில்லி, அரியானா, உத்தரப்பிரதேச மாநிலங்களில் பொலிசார் வலை விரித்தனர். ஆனால் அவர்கள் சிக்கவில்லை

# ஜெயேந்திரர் கைது பிரச்சினை கருணாநிதி மீது அவதூறு வழக்கு

ஜெயேந்திரர் கைது விவகாரத்தில் அரசை அவதூறாகப் பேசியதாகக் குற்றம் சாட்டி தி.மு.க தலைவர் கருணாநிதி மீது புதிய அவதூறு வழக்கை தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது.

காஞ்சிபுரம் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரரைப் பொலிசார் கைதுசெய்தனர். அவர் கைதுசெய்யப்பட்ட பிறகு தி.மு.க தலைவர் கருணாநிதி சில கருத்துக்களைக் கூறினார்.

கருணாநிதியின் கருத்துக்களால் தமிழக அரசுக்கு அவதூறு ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக அவர் மீது தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் சென்னை முதன்மை நீதிமன்றில் கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.


## பணிமனை இடமாற்றம்

புதுக்குடியிருப்பில் இயங்கிவந்த வாடகைக்கார் உரிமையாளர் கழகம் வன்னி பணிமனை வரும் 15-062005ஆம் நாள் தொடக்கம் பரந்தன் புதிய கட்டடத்தில் இயங்கும் என்பதை உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

'நன்றி'

தே. ரூபன்,
தலைவர்.

(6265)

## பணிமனைத் திறப்பு விழா

வரும் 15-06-2005ஆம் நாள் பிற்பகல் 3.00 மணிக்கு புதிய பணிமனை (வாடகைக்கார் உரிமையாளர் கழகம் வன்னி)திறப்பு விழா நிகழ்வு இடம்பெறும். இதில் அனைத்து உரிமையாளர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

'நன்றி'

தே. ரூபன்,
தலைவர்.

(6265)



# கேள்வி அறிவித்தல்

## மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை

**சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் நிதி உதவியினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான திட்டம் (STAART) உட்கட்டமைப்பு புனர்நிர்மாண திட்டம் (IRP)**

01) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான (STAART) திட்டச் செலவின் பொருட்டு சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBIC) நிதி உதவித் திட்டத்தின் கீழ் கடன் தொகை ஒன்றினைப் பெற்றுள்ளதுடன் அந்நிதியின் ஒரு பகுதியினை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பொருத்தமான செலவுகளை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| கேள்வி குறியீட்டு இல. | வீதியின் பெயர் | இக்ராட் (வீதி) பதி வின் ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | கேள்விப் பிணை ரூபா |
|---|---|---|---|---|
| மாவட்டம் : திருகோணமலை | | | | |
| STAART/NEP/TC/5 | பன்குளம்கிவுலுகடவெல திரியாய வீதி | M6 | 1,500/- | 52,500/- |
| STAART/NEP/TC/6 | குச்சவெளி கள்ளம்பத்தை வீதி | M6 | 1,500/- | 60,000/- |
| மாவட்டம் : முல்லைத்தீவு | | | | |
| STAART/NEP/MU/3 | கள்ளப்பாடு தூண்டல் மீனவ வீதி | M6 | 1,500/- | 80,000/- |
| STAART/NEP/MU/4 | அலம்பில் தூண்டல் மீனவ வீதி | M6 | 1,500/- | 50,000/- |
| மாவட்டம் : மட்டக்களப்பு | | | | |
| STAART/NEP/Bt/6 | ஒந்தாச்சிமடம் கோட்டைக்கல்லாறு வீதி | M6 | 1,500/- | 75,000/- |

02) மேலே குறிப்பிட்ட வேலைகளுக்கான பொறி வைக்கப்பட்ட (Sealed) கேள்விகள் திணைக்களக் கேள்விச் சபையின் சார்பின் வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

03) கேள்வி ஆவணங்களை திருகோணமலை கிறீன் வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2005-06-08 ஆம் திகதி முதல் 2005-06-27ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும்.

04) கேள்வி ஆவணங்களை மேற்கூறிய அலுவலகத்தில் கட்டணம் எதுவுமின்றி பார்வையிட முடியும்.

05) கேள்விகள் அவை சமர்ப்பிக்கும் நாளிலிருந்து 90 நாட்களுக்கு செல்லு படியானவையாகவிருத்தல் வேண்டும்.

06) கேள்விகள் மேலே கூறப்பட்ட கேள்விப் பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் பிணை ஆனது சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 118 நாட்களுக்கு செல்லுபடியாகுமாறு இருத்தல் வேண்டும்.

07) கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 2005-06-28 பிற்பகல் 2.30 மணியாகும்.

08) பொறி வைக்கப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ முடிவு நேரத்திற்கு முன்பாக "தலைவர் கேள்விச் சபை, மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் வீதி அபிவிருத்தித் திணைக்களம், கிறீன் வீதி, திருகோணமலை" என்ற முகவரிக்கு கிடைக்கப்பெறத்தக்கதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

09) கேள்விகள் யாவும் மேற்கூறிய முகவரியில் கேள்வி நேரம் முடிவுற்ற உடன் திறக்கப்படும்.

10) கேள்விகள் கோருவோரோ அல்லது அவர்களது அங்கீகாரமளிப்பட்ட பிரதிநிதிகளோ கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்க முடியும்.

11) மேலதிக விபரங்களுக்கும் விளக்கங்களுக்கும் மாகாணப் பணிப்பாளரை 026-2222878 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

*எந்திரி. ஏ.ஈ.எஸ். இராஜேந்திரா*
*மாகாணப் பணிப்பாளரும், தலைவரும்,*
*திணைக்கள கேள்விச் சபை,*
*வீதி அபிவிருத்தித் திணைக்களம்,*
*வ.கி.மா. திருகோணமலை.*

(சி-12202)

# இரண்டாவது சுனாமி நலநிதிக் கிரிக்கெட் போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் இன்று



கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியால் இலட்சக்கணக்கானோர் உயிரையும், உடமைகளையும் இழந்தனர். இவர்களுக்கு உதவும் வகையில் சுனாமி கிரிக்கெட் போட்டி நடத்த திட்டமிடப்பட்டது. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் சுனாமி பாதித்த பகுதிகளுக்கு நிவாரண நிதியாக வழங்கப்படும்.

இதன் மூலம் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. இதில் பொண்டிங் தலைமையிலான அணியும், கங்குலி தலைமையிலான அணியும் மோதின. இதில் பொண்டிங் அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின் மூலம் 50 கோடி ரூபாய் நிதி திரண்டது.

இந்த நிலையில் இரண்டாவது சுனாமி கிரிக்கெட் போட்டி இன்று லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடக்கிறது. இதில் எம்.சி.சி 11 பேர், உலக 11 பேர் அணிகள் மோதுகின்றன. எம்.சி.சி அணிக்கு நியூசிலாந்து வீரர் பிளமிங் தலைவராகவும் உலக 11 பேருக்கு லாறா தலைவராகவும் உள்ளனர்.


எம்.சி.சி அணியில் மேற்கிந்திய வீரர் சர்வான் பிலகியதால் அவருக்குப் பதிலாக இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கங்குலி சேர்க்கப்பட்டுள்ளார்.இந்த அணியின் லட்சுமன்,கும்ளே, முரளிதரன், கலிஸ் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.உலக 11 பேர் அணியில் அதிரடி ஆட்டக்காராகளான ஷேவாக், ஜெய சூரியா மற்றும் ராவிட், வோர்ன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

# பட்டம் வென்றார் லைலா அலி



வோஷிங்டனில் ஒரு புறம் டைசன்-மெக்பிரைட் மோதல் நடக்க, மறுபுறம் அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் சம்பியன் முகமது அலியின் மகள் லைலா அலி-எரின் டக்ஹில் மோதல் நடந்தது.முதல் சுற்றில் டக்ஹில் தனது வேகமான தாக்குதல்களால் பார்வையாளர்களைக் கவர்ந்தார். அடுத்த இரண்டு சுற்றுக்களில் லைலாவின் ஆவேச குத்துக்களுக்கு டக்ஹிலால் பதிலடி தர முடியவில்லை. இவரின் தொடர்ச்சியான 20 குத்துக்களைத் தாங்க முடியாமல், மூன்றாவது சுற்றிலே தோல்வியை ஒப்புக்கொண்டார் டக்ஹில். இதைத் தொடர்ந்து முதன் முறையாகப் பெண்கள் பிரிவில் 'சூப்பர் மிடில் வெயிட்' குத்துச்சண்டை சம்பியன் பட்டம் வென்ற பெருமையைப் பெற்றார் லைலா அலி.

# 100வயதை தாண்டியவனை போன்று உணர்ந்தேன்-டைசன்



எனது குத்துச்சண்டைக் காலம் முடிவுக்கு வந்துவிட்டது. இனிமேல் யாருடனும் மோதுவது இல்லை என முடிவு செய்து விட்டேன் எனத் தெரிவித்துள்ளார் மைக்டைசன். 1990 இல் எனது குத்துச்சண்டை வாழ்க்கை முடிவுக்கு வந்து விட்டதாக உணர்ந்தேன். ஆறாவது சுற்றில் நான் மிகவும் தளர்ந்து விட்டேன். அதற்கு மேல் மோதக்கூடாது என்று எடுத்தமுடிவு இதயத்திலிருந்து வந்தது. 100 வயதை தாண்டியவனைப் போல நான் உணர்ந்தேன். என்னால் இனி யாரையும் வெல்ல முடியாது இந்தத் தருணத்திலே ஓய்வுபெறுவதை விரும்புகிறேன் என்றார்.


வெற்றி குறித்து பேசிய மெக்பிரைட். "இந்த வெற்றிமூலம் எங்கள் நாட்டுக்கு (அயர்லாந்து) பெருமை தேடித்தந்துவிட்டேன்" என்றார்.

கடந்த ஆண்டுகளாக குத்துச்சண்டை உலகில் வலம் வந்த டைசன் 1987 -90 வரை ஹெவிவெயிட்சம்பியனாக இருந்தவர் 38 வயதான இவர் இதுவரை ஆறு முறை மட்டுமே தோற்றுள்ளார். 50 போட்டிகளில் வென்றுள்ளார். கடைசியாக மோதிய நான்கு போட்டிகளில் மூன்றில் தோற்றுள்ளார். 2004 ஜூலையில் நடந்த மோதலில் பிரிட்டன் வீரர் டேனி வில்லியம் சுடன் மோதி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.



யோகஹமாவில் நடந்த கண்காட்சி கால்பந்துப் போட்டியில், பார் சிலோனா அணிவீரர் லான்சரோடே மனுவேலிடம் (இடது) இருந்து பந்தைப் பாய்ந்து சென்று தட்டிச்செல்ல முயல்கிறார் எதிரணிவீரர்

# பட்டம் வென்றார் பெடரர்



ஜேர்மனியுடன் ஹாலே நகரில் டென்னிஸ் போட்டி நடைபெற்றது இதன் இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர்மராட் சஃபினு டன் மோதினார். இதில் பெடரர் 6-4,6-7,6-4, என்ற செட்டில் சஃபினைத் தோற் கடித்து சம்பியன் பட்டம் வென்றார்.

# முன்பள்ளி வி.போட்டி

பரந்தன் பிரதேசத்திலுள்ள குமரபுரம் காத்தான் முன்பள்ளி, உமையாள்புரம் கலையரசி முன்பள்ளி, குமரபுரம் கால் ஏக்கர் சரவணன் முன்பள்ளி, பரந்தன் முன்பள்ளி ஆகிய நான்கு முன்பள்ளிகளின் ஒருங்கிணைந்த விளையாட்டு விழா கடந்த சனியன்று பரந்தன் பொது விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டு கழக காப்பாளர் விக்ரர்மான் தலைமையில் நடைபெற்றது.தொடர்ந்து முன்பள்ளி சிறார்களின் உடற்பயிற்சி, வினோதஉடை, முயல்பாய்ச்சல், பழம் பொறுக்குதல் எனப்பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இறுதியாக முன்பள்ளி சிறார்களுக்கான பரிசில்களை நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், தருமபுரம் பங்குத்தந்தை யூட் நிக்சன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர் (14)

# யாழ். பல்கலை காப்பந்து அணிக்கு உள்ளூர் போட்டிகளில் விளையாடத்தடை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியை ஒரு வருடகாலத்திற்கு கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளாது தடைசெய்வதென யாழ். மாவட்ட உதைபந் தாட்ட லீக்குகள் தீர்மானித்துள்ளன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் குழப்பம் ஏற்படுத்தியமையினாலும் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்க மறுத்தமையாலும் இத்தீர்ப்பை மேற்கொண்டதாக லீக்கின் உத்தி யோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இந் நடவடிக்கையானது எல்லைப்படை மாவீரர்களை கொச்சைப்படுத்திய ஒரு செயல் என பொதுமக்கள் பலரும் கவலை தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

இந்நிலைமையிலேயே இத்தகைய முடிவொன்று எடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (41)

# பாகிஸ்தான் வீரர்களிடையே வாக்குவாதம் விசாரணை நடத்தப்படும்-அபாஸ் ஜெய்தி



பாகிஸ்தான் கிரிக்கெட்டில் வாக்குவாத பிரச்சினை தொடர்வது குறித்து வீரர்களிடம் புதிதாக விசாரணை நடத்தி நடவடிக்கை எக்கப்படும் எனத்தெரிகிறது.

மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான பிரிட்ஜ் டெஸ்ட் பாகிஸ்தான் அணியில் பெரும் சர்ச்சையை கிளப்பியது இப்போட்டியின்போது துடுப்பாட்டவரிசை தொடர்பாக அப்ரிடி, யூனிஸ்கான், இன்சமான் மத்தியில் வாக்குவாதம் ஏற்பட்ட பின்னர் மூவரும் சபைத்தலைவர் ஷாரியார்கானிடம் மன்னிப்புக் கேட்க, பிரச்சினை முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்தச் சூழலில் மேற்கிந்தியத்தீவு பயணம் பற்றிப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில் சிறப்பு கமிட்டி ஆய்வு செய்தது. ஒரு நாள் தொடரை வென்றது (3-0), டெஸ்ட் தொடரை சமன் செய்தது (1-1) குறித்து திருப்தி தெரிவித்தது.இதில் யூனிஸ்கான் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டன. பிரிட்ஜ் டெஸ்ட போட்டியில் தற்காலிகத்தலைவராக இருந்த யூனிஸ்," "வாக்குவாதப் பிரச்சினை இளம் வீரர்களை வெகுவாகப் பாதித்தது. அதனால் தான் தோல்வியடைந்தோம். பிரச்சினையில் அணியின் நிர்வாகம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் தலைவர் பேச்சை மீறுவது தடுக்கப்படும்," என்று கூறியிருந்தார். இது பற்றி கமிட்டியின் உறுப்பினர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு காணப்பட்டது. பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அதிகாரி ஜெய்தி கூறுகையில், வாக்குவாத பிரச்சினை பற்றி சிறிய அளவில் விசாரணை நடத்தப்படும் என்றார்.

# கராத்தே சுற்றுப் போட்டி



காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம், புனிதபூமி சிறுவர் இல்ல மாணவர்கள் மற்றும் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கராத்தே வீரர்களிற்கிடையிலான கராத்தே சுற்றுப்போட்டி அறிவுச்சோலை சிறுவர் இல்ல வளாகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற்றது. கராத்தே ஆசிரியர் வள்ளுவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம நடுவராக தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் சோதி மாஸ்ரர் அவர்கள் கலந்து கொண்டார். இக்கராத்தே சுற்றுப்போட்டியில் 100இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தளபதி லெப்.கேணல் சாள்ஸ் நினைவாக விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

கடற்புலிகளின் முதல் தாக்குதல் தளபதியான லெப்.கேணல் சாள்ஸ் மற்றும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். மகான் ஆகியோரது 12ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாபெரும் விளையாட்டுப்போட்டி மற்றும் கலை நிகழ்வுகள் வன்னியிலுள்ள லெப்.கேணல் நிரோஜன் கலையரங்க மைதானத்தில் நடைபெற்றுள்ளது. போராளி அறிவழகி தலைமையில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணி முதல் மாலை ஆறுமணி வரை இறுதித் தேர்வுக்கான விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.இதில் சிறப்பு நிகழ்ச்சிகளாக படைய தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் கவிதா நிகழ்வு, சாள்ஸ் படையணியின் நடன நிகழ்வு, நவம் அறிவுக்கூட போராளிகளின் இசைநிகழ்வு என்பன இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து தமிழீழ கடற்படைச் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் சிறப்புரையாற்றினார். இந் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் கள முனைத் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பெருமளவா னோர் கலந்துகொண்டனர்.

விளையாட்டு நிகழ்வில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு தளபதிகள், பொறுப்பாளர்கள் ஆகியோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு




## பூஜிதா ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி

கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட்போட்டி நேற்று ஆரம்பமானது.

காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்று போட்டியில் ஆறு அணிகள் கலந்து கொண்ட மூன்று போட்டிகள் நடைபெற்றன. இதில் இளந்தென்றல் நியூஸ்ரார் N.E.C அணிகள் வெற்றிகள் பெற்று அடுத்த சுற்றிற்குத் தெரிவாகின. போட்டிகள் இன்னும் தொடர்ந்து நடைபெறும்.

போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாகக் குமார் சுபானந்த் ஆகியோர்கள் கடமையாற்றினர்.



## சிந்தனைக்கு

தமிழ்மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## என்ன யோக்கியதை உண்டு?

ஜே.வி.பி சொல்லாலும், செயலாலும் வன்முறைகளைக் கைவிட்டதா? ஜே.வி.பி பாராளுமன்ற அரசியலுக்கு வருவதற்கு முன்னர் தனது பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டதா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஜே.வி.பி காட்டிவரும் எதிர்ப்பைத் தொடர்ந்தே சனாதிபதி சந்திரிகா இத்தகைய கேள்விகளை எழுப்பியுள்ளார். சனாதிபதி சந்திரிகாவின் இக்கேள்வியானது ஜே.வி.பி யின் மீது அவர் கொண்டுள்ள சினத்தின் வெளிப்பாடு எனக் கூறுதல் தவறாக மாட்டாது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பிற்கான ஆதரவானவரோ அன்றி தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்ப்பவரோ அல்ல.ஆனால் இன்று பொதுக்கட்டமைப்பு அவசியமானதாகவும், சிறிலங்காவின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்படும் ஒன்றாகவும் மாறிவிட்டது. இதன்காரணமாகவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக் கட்டமைப்புப் பற்றி தீவிர கவனம் செலுத்தவேண்டியதாகியுள்ளது. இது ஜே.வி.பிக்கும் தெரியாத தொன்றல்ல. ஆயினும் ஜே.வி.பி பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியானதொரு நிலைப்பாட்டுடன் உள்ளது. இதன் மூலம் தனது அரசியல் பலத்தைவலுப்படுத்தலாம் எனக் கருதுகின்றது.

ஜே.வி.பி யின் நிலைப்பாட்டின்படி விடுதலைப்புலிகள் ஓர் சனநாயக அமைப்பல்ல. ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு பாராளுமன்ற அரசியலுக்கு திரும்பியதாக அது இன்னமும் அறிவிக்கவில்லை. ஆகையினால் விடுதலைப்புலிகளுடன் செய்துகொள்ளப்படும் உடன்பாடு புலிகளின் வளர்ச்சிக்கும் பிரிவினைக்குமே வழிவகுக்கும் என்பதாகும்.

ஜே.வி.பி யின் இக்குற்றச்சாட்டு இன்றைய தேவையுடன் பொருத்தப்பாடானதல்ல. பொதுக்கட்டமைப்பு, இனப்பிரச்சினை தொடர்பான எந்த விடயத்துடனும் சம்பந்தப்பட்டதல்ல என்பது வெளிப்படையானது. பொதுக்கட்டமைப்பு எந்தவித அதிகாரப் பரவலாக்கலையும் செய்யவில்லை என்பதை ஜே.வி.பி யினர் புரிந்துகொள்ள முடியவில்லை எனக் கூறுவது விதண்டாவாதம் செய்வதாகவே அர்த்தம் கொள்ளத்தக்கதாகும்.

இது ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பை உருவாக்குகின்றாரோ இல்லையோ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் உடன்பாடு எதையும் செய்துகொள்ளக்கூடாதெனக் கூற ஜே.வி.பிக்கு யோக்கியதை இல்லையெனஅவர் கூறுவது முற்றிலும் சரியானதே. ஏனெனில், ஜே.வி.பி யினர் விடுதலைப்புலிகள் உடன்பாடு செய்துகொள்வதற்கு தகுதியற்றவர்கள் எனக்கூறுவதற்கு முன் தாங்கள் அரசாங்கத்தில் பங்கேற்க அருகதையுடையவர்களா? என்பதை சிந்திக்கவேண்டும்.

அதாவது, சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளது போல் ஜே.வி.பி சொல்லிலும், செயலிலும் பயங்கரவாதத்தைக் கைவிட்டதா? ஜே.வி.பி அரசியலுக்கு வருவதற்கு முன்னர் பயங்கரவாத செயல் முறையைக் கைவிட்டதா? இவை எதுவுமே நடக்கவில்லை. சட்டவிரோதமாக நாட்டைவிட்டு ஓடியவர் இன்று அக்கட்சியின் தலைவர் என்ற ரீதியில் திரும்பிவந்து ஏனையவர்களின் தகுதி, தகுதியின்மை குறித்துக் கேள்வி எழுப்பிக்கொண்டிருக்கின்றார்

இதேவேளை சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி யின் தகுதி குறித்து எழுப்பியுள்ள கேள்விகள் ஓரிரண்டு மட்டுமே. ஆனால் பயங்கரவாதம் பற்றியும், ஆயுதங்கள் பற்றியும் பேசும் ஜே.வி.பி குறித்து எழுப்பக்கூடிய கேள்விகள் பல உள்ளன. இதில் ஆயுதப்போராட்டம் நடத்தி அதில் தோல்வியுற்ற ஜே.வி.பி தம்மிடம் இருந்த ஆயுதங்களைச் சனநாயக வழிக்கு திரும்பிய பின்னராவது அரசாங்கத்திடம் ஒப்படைத்ததா? என்பது முதலாவதாகும்

அடுத்து ஜே.வி. பி கிளர்ச்சி செய்த காலத்தில் கொள்ளையிடப்பட்ட பலகோடிக்கணக்கான அரசினதும், மக்களினதும் சொத்துக்களுக்கு நடந்தது என்ன? அது தற்பொழுது யார் கையில் உள்ளது? அதை அனுபவிப்பவர்கள் யார்?

இவை தான் ஒருபுறம் இருக்க, ஜே.வி.பி படுகொலை செய்த ஆயுதப்படையினர், அவரது குடும்பத்தினர், இந்தியப் பொருட்களை விற்பனை செய்தமைக்காகப் படுகொலை செய்யப்பட்ட வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் தொடர்பாக ஜே.வி.பி தற்பொழுது கூறப்போவது என்ன? இதற்காகக் குறைந்தபட்சம் அது மன்னிப்புத்தானும் கோரியதா?

இந்நிலையில் ஜே.வி.பிக்கு ஓர் இனத்தின் விடுதலைக்காகப் போராடும் அமைப்பு ஒன்றுடன் உடன்பாடு எதனையும் செய்துகொள்ளக்கூடாது எனக்கோருவதற்கு என்ன யோக்கியதை இருக்கின்றது?. ஜே.வி.பி யினரை யார் சனநாயகவாதிகள் என ஏற்றுக் கொள்வது? கிளர்ச்சியில் தோல்வியுற்றதால் வேறு வழியின்றி பாராளுமன்ற அரசியலுக்குள் பாதுகாப்புத் தேடிக்கொண்டவர்கள் எவ்வாறு சனநாயகவாதிகள் ஆகிவிடமுடியும?.

# ஆழிப்பேரலை நிவாரணம் வழங்கக்கோரி; தெற்கில் மக்கள் வீதி மறியல் போராட்டம்

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தங்களுக்கான நிவாரணத் தொகையை வழங்கக்கோரி பரெலிய என்ற இடத்தில் மக்கள் வீதிமறியல் போராட்டம் நடத்தினர்.

கொழும்பிற்கும், காலியின் தென் பகுதிக்கும் இடையேயான பகுதியில் அவர்கள் போக்கு வரத்துகளை மறித்தனர். தங்களது துன்பத்தைத் தெரிவிக்கும் வகையிலான கறுப்புப் பதாதைகளை ஏந்தி ஆளும் அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

அப்போது அங்கு வந்த சிறிலங்காப் பொலிசார். போராட்டக்காரர்களை கலைக்க முயன்றனர். ஆத்திரமடைந்த மக்கள் பேருந்துகள் மீது கல் வீசித் தாக்கினர். போராட்டத்தில் பங்கேற்ற பலரும் சிறிலங்காப் பொலிசாரால் கடுமையான தாக்குதலுக்கும் உள்ளாகியுள்ளனர்.

# திருமலை புத்தர்சிலை விவகாரம்; வழக்கு ஆகஸ்ட்டுக்கு ஒத்திவைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை புத்தர்சிலை அமைப்புத் தொடர்பில் சட்டமா அதிபரினால் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குஆகஸ்ட் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் வழக்கை ஓகஸ்ட் மாதம் மூன்றாம்திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி தியாகேந்திரன் அன்றைய தினம் முச்சக்கர வண்டி சாரதிச் சங்கத்தின் செயலரை ஆஜராகுமாறு உத்தவிட்டார்.

"புத்தர்சிலை அமைக்கப்பட்ட காணி அரசுக்குச்சொந்தமானது. அதன் பராமரிப்பு திருகோணமலை நகரசபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இக்காணியில் புத்தர்சிலை சட்டவிரோதமாக வைக்கப்பட்டள்ளது என்று நீதிமன்றம் பிரகடனம் செய்யவேண்டும். அத்துடன் இவ் வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவுறும் வரை, புத்தர்சிலை அமைந்துள்ள இடத்தில் திருத்தங்களோ, புதிய கட்டுமானங்களோ ஏற்படுத்தக் கூடாது என்று எதிராளிக்கு மன்று உத்தர விடவேண்டும்" என்று சட்டமா அதிபர் கோரியிருந்தார். அதனை ஏற்று இடைக்கால தடையுத்தரவு ஒன்றை நீதிபதி பிறப்பித்தார். அத்துடன் நேற்றுவரை விசாரணையையும் ஒத்திவைத்தார். திருமலை மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று இவ் வழக்கு விசாரணைக்கு வந்தபோது திருமலை நகரசபையின் செயலாளர் எஸ். விபுலானந்தன் உதவிப் பொலிஸ் அதிபர் பிரியந்த வீரசூரியா ஆகியோர் சமூகமளித்திருந்தனர். நீதிபதி விசாரணை ஆகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைத்தார். (25,32)

## சிவராம் கொலைக்குப் பயன்படுத்திய வாகனம் பொலிசாரால் மீட்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் கொலை தொடர்பில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாகனம் மகரகம பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகச் சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.இதேவேளை சிவராமின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டவரிடம் இருந்து சிவராம் பயன்படுத்திய செல்லிடத்தொலைபேசிக்கான இலத்திரனியல் "சிம்" அட்டையும் கைப்பற்றப்பட்டுள்ளது.இந்தத் தகவல்களை கொழும்பு குற்றப் புலனாய்வு அதிகாரி சரத் லூகொடவெளியிட்டுள்ளார். (32)

## இராஜினாமா செய்யப்போவதில்லை ரெஜினோல்ட்கூரே அறிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணசபை முதல்வர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப்போவதில்லை என்று ரெஜினோல்ட் கூரே நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்யும் இவருக்கு ஊடக அமைச்சுப்பதவியை வழங்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளதாக வெளியான செய்திகளையும் அவர் நிராகரித்தார். இருந்தபோதும் தனக்கு அமைச்சுப்பதவி கொடுப்பது தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பரிசீலித்து வருவதாக ரெஜினோல்ட் கூரே கூறினார்.

# பொதுக்கட்டமைப்பு முயற்சிகள் முற்றாக முறியடிக்கப்பட்டுவிட்டன

- ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

ஓமல்பேசோபிததேரரின் உண்ணாவிரதப்போராட்டம் காரணமாக பொதுக்கட்டமைப்பு தொடர்பான சனாதிபதியின் அனைத்து முயற்சி களும் முறியடிக்கப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளு மன்றக் குழுத்தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பு சேருவாவில பௌத்த நிலையத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே தேரர் இதனைத் தெரிவித்தார். கடந்த ஏழாம்திகதி பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட சனாதிபதி தீர்மானித்திருந்தார். பொதுக் கட்டமைப்புத் தொடர்பான உடன் படிக்கையின் உள்ளடக்கம் என்ன என்பது அவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மட்டுமே தெரியும். இது பற்றி அமைச்சரவை கூட எதுவும் அறிந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் ஓமல்பே சோபிததேரரின் உண்ணாவிரதத்தையடுத்து இவ்வனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தப் பொதுக்கட்டமைப்பிற்கு முழுநாடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. மகாநாயக்கர்களின் அனுமதியின்றி இந்தப் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படமாட்டாது என்று சனாதிபதி தெரிவித்துள்ளார். மகாநாயக்கர்களின் உறுதிமொழியையடுத்தே இந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. இந்த உறுதிமொழியை சனாதிபதி மீறினால் ஜாதிக ஹெல உறுமய மட்டுமல்லாது, மகாநாயக்கர்களும் முழுநாட்டு பௌத்த மக்களும் அவருக்கெதிராக அணி திரளுவார்கள். சனாதிபதி தற்போது எமது பிக்குமார். பின்னாலும் எமது ஆதரவாளர்கள் பின்னாலும் இரகசியப் பொலிசாரைஅனுப்புகிறார். கொழும்பிலிருக்கும் புலிகளைக் கைது செய்ய அவர் நடவடிக்கை எடுக்காது எங்கள் ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்த முயல்கிறார் என்று அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு; இணக்க உடன்பாடு பற்றிய விபரம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்புக்கு முன்னதான இணக்க உடன்பாடு குறித்துஇணையத்தளமொன்றில் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் உயர்மட்டக் குழுவொன்று அமைக்கப்படும். அதில் அரசாங்கம் தமிழீழவிடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் என மூவர் அங்கம் வகிப்பர்.இந்தக்குழுவே ஆழிப்பேரலையின் பின்னரான அபிவிருத்தி தொடர்பில் இறுதித்தீர்மானத்தை நிதிவழங்குநர்களுக்கும் உலக வங்கிக்கும் சமர்பிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

இதனையடுத்து அமைக்கப்படவுள்ள பிராந்தியக் குழுவில் பத்துப் பேர் அங்கம் வகிக்கின்றனர்.இதில் ஐவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளாகவும், மூவர் முஸ்லிம் பிரதிநிதிகளாகவும், இருவர் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகவும் இருப்பர்.மூன்றாவதாக ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களின் சார்பில் ஆறு குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதில் அரசாங்க அதிபர் தலைமையாளராக இருப்பார்.அத்துடன் மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள், உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் சிறுவர் மையமான யுனிசெப், அகதிகளுக்கான ஐக்கிய நர்டுகள் சபையின் அமையம் என்பவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.ஆழிப்பேரலையின் பின்னர் அமைக்கப்படவுள்ள இந்தப் பொதுக் கட்டமைப்பின் நிர்வாகக் கட்டமைப்பு அடிப்படையில் மாவட்டக்குழுவின் பரிந்துரையை பிராந்தியக்குழுவின் குறைந்தது ஏழுபேர் அங்கீகரிக்க வேண்டும். இந்தக்குழுவின் நடைமுறைகளை உதவி வழங்கும் அமைப்புக்களின் இரண்டு பிரதிநிதிகள் மேற்பார்வை செய்வர்.இதேவேளை பொதுக்கட்டமைப்புக்கான நிதிவழங்கல் நடவடிக்கை அனைத்தையும் திறைசேரியே மேற்கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# எந்த நேரமும் யுத்தப்பிரகடனம் செய்யக்கூடிய இராணுவ பலம் விடுதலைப்புலிகளிடம் உண்டு

## சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களை நிர்வகித்து வருகின்றனர்.அவர்களிடம் இராணுவப்பலமுள்ளது. எந்த நேரத்திலும் யுத்தப் பிரகடனம் செய்யக் கூடிய நிலையிலுள்ளனர். இவ்வாறான நிலையிலேயே சனாதிபதி தனதுபதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்தினுள் இந்த நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகிறார். இவ்வாறு சிறிலங்காவின் சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

சியம்பலாப்பேயில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிவப்பு சகோதரர்கள் 15ஆம் திகதிவரை காலக்கெடு விதித்துள்ளனர்.இந்நிலையில் கூட்டணி அரசாங்கத்தை காக்கும் வகையிலான தீர்மானம் ஒன்றை சனாதிபதி எடுத்தாக வேண்டும். கூட்டணி அரசாங்கத்தை ஏற்படுத்தியது மக்கள். அதனால் இந்த நிலையில் அரசாங்கத்தைக் கவிழ்க்க யாருக்கும் உரிமையில்லை. சனாதிபதிக்கோ, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கோ ஜே.வி.பி. கட்சிக்கோ கூட்டணி அரசாங்கத்தைக் கவிழ்க்க உரிமையில்லை. ஒமல்பே சோபித்த தேரர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளார். எமக்கு அது மகிழ்ச்சியை அளிக்கிறது.ஆனால் சமாதானத்தை ஏற்படுத்த கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவாகும். இதனை கைவிடலாகாது. பொதுக் கட்டமைப்புக் கைச்சாத்திடப்படாது போனால் நாட்டிற்குச் சில பயங்கரமான பிரதிபலன்கள் கிட்டக் கூடும் .அவ்வாறு நிகழ்ந்தால் ஜாதிக ஹெல உறுமய உட்பட பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்த கட்சிகள் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

பொதுக்கட்டமைப்பை செயற்படுத்தினால் நாட்டிற்கு 2.2 பில்லியன் அமெரிக்க டொலர் உதவி கிடைக்கும் பொதுக்கட்டமைப்பு இன்றேல் அது கிடைக்காது. அரசியல் தேவைகளுக்காக மக்களைத் தூண்டிவிடுபவர்கள் இவை பற்றி புரிந்துகொள்ளுதல் அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உந்துருளிகள் நேருக்கு நேர் மோதல்; மணற்காட்டில் நால்வர் படுகாயம்

(வடமராட்சி)

வடமராட்சி மணற்காட்டுப் பகுதியில் நேற்றுக்காலை உந்துருளிகள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

படுகாயங்களுக்குள்ளானவர்கள் பருத்தித்துறை, மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மணற்காட்டுப் பகுதியில் புனித அந்தோனியார் தேவாலயப் பெருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அவ்வீதியில் போக்குவரத்து நெருக்கடி காணப்பட்ட வேளை எம்.டி. 90 ரக உந்துருளியும், ரி.வி எஸ். விக்ரர் ரக உந்துருளியும் நேருக்கு நேர்மோதிக் கொண்ட தாலேயே இவ் விபத்து நிகழ்ந்துள்ளது.

இவ் விபத்தில் ரி.வி.எஸ் உந்துருளியைச்செலுத்தி வந்தவரான சாள்ஸ் அன்ரனி (வயது-18) மற்றும் தோமஸ் குணசீலன் (வயது24) ஆகியோரே அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனாவைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தோமஸ் குணசீலன் தயாள சீலி (வயது-04) டேவிட் மரியசீலன் செல்லக்குமார் (வயது- 23) ஆகியோர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் இரண்டு உந்துருளியில் வந்திருந்தவர்களும் உறவினர்கள் என்பதுடன் ரி.வி. எஸ். விக்ரர் ரக உந்துருளியில் ஐவர் பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கா)

# தாண்டிக்குளத்தில் பேருந்து மோதி இராணுவச்சிப்பாய் படுகாயம்

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம் பெற்ற வீதிவிபத்தில் இராணுவச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார். நேற்றுக்காலை 8.15மணியளவில் வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி சென்ற பேருந்து ஒன்று குறுக்கு வீதியின் ஊடாக வந்த சிப்பாயை மோதியுள்ளது. இதன்போதே மேற்படி சிப்பாய் கடுமையான காயத்திற்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது செனவிரட்ண(வயது-23) என்ற சிப்பாயே காயமடைந்ததாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

# தேராவிலில் பாரவூர்தி கவிழ்ந்து ஒருவர் மரணம்; இருவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

உடையார்கட்டு தேராவில் குளத்தடிப்பகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஏற்பட்ட பாரவூர்தி விபத்தில் ஒருவர் பலியானதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அப்பாரவூர்தி நடத்துநரான ஆ. பெருமாள் (வயது 52) என்பவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை



பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.காயமடைந்த இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். விசுவமடுவிலிருந்து உடையார்கட்டு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இப்பாரவூர்தியானது உடையார்கட்டு தேராவில் குளத்தை அண்மித்த வீதியின் திருப்பத்தில் சென்றவேளை சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து தடம்புரண்டு சுமார் ஐந்து அடி ஆழமான பள்ளத்தில் வீழ்ந்தது. இதனால் பாரவூர்தி பலத்த சேதமடைந்துள்ளது. (கு,ச,லோ)

# பொதுக்கட்டமைப்பு குறித்து 30ஆம் திகதிக்குள் தீர்மானம்

## - சனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தீர்மானம் எடுக்கப்படும் என சனாதிபதி தெரிவித்துள்ளார்.. நேற்று சனாதிபதி மாளிகையில் வைத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர்கள், மற்றும் நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் மத்தியில். உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜே. வி. பி தாம் முன்னெடுக்கின்ற அனைத்து விடயங்களுக்கும் தடையாக இருப்பதாக அவர் குற்றம் சுமத்தினர்.

பொருளாதார திட்டங்கள் இனப்பிரச்சினை தீர்வுத் திட்டங்கள் அனைத்திற்கும் அந்தக் கட்சி தமது எதிர்ப்பைக காட்டி வருவதாக சனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிலையில் தாம் பொதுக் கட்டமைப்பை அமைப்பதில் உறுதியாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இங்கு கருத்துரைத்த அமைச்சர் மங்கள சமரவீர தாம் பொதுக்கட்டமைப்புக்கு எதிரானவன் அல்ல. ஆனால் அந்தத் திட்டம் ஆட்சியை பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படவேண்டும் எனத்தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரும் தென் மாகாண ஆளுநருமான கிங்ஸ்லி டி விக்கிரமரட்ண கருத்துக் கூறுகையில்: குறித்த திட்டம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென யோசனை தெரிவித்தார். இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பு அமைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நடவடிக்கை குழு தமது அங்கீகாரத்தை வழங்கியது இதன்போது கருத்துரைத்த பிரதி அமைச்சர் டிலான் பெரேரா நடவடிக்கைக் குழு பொதுக் கட்டமைப்பை ஆதரித்துள்ளது. எதிர்பாராத விதமாக பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படாவிட்டால் மீண்டும் அது குறித்து நடவடிக்கைக்குழுவுக்கு விளக்கம் அளிக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (32)

## போராளிகள்...

வேளை அங்கு இரு தரப்பினருக்குமிடையில் கடும் வாக்குவாதம் மூண்டது. அவ்வேளை அங்கு நின்றிருந்த பொதுமக்களும் புலிகளுக்கு ஆதரவளித்து இராணுவத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவ்வேளை நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு வரவழைக்கப்பட்டு நிலைமை சுமுகமடைந்தது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியல் பணிக்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் புலி உறுப்பினர்கள் தம்முடன் சயனைட் வில்லைகளை எடுத்துச் செல்லலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பௌத்த...

அதைத் தொடர்ந்து சிங்கள பேரினாவாதத்தை குறிக்கும் சவப்பெட்டியை மாணவர்கள் தாங்கிச்சென்றனர். சவப்பெட்டிக்கு முன்னதாக மரண வீட்டின் இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளும் மகன் போன்று பல்கலைக்கழக மாணவனொருவர் செல்ல பின்னே ஒப்பாரி வைத்தவாறு மாணவ, மாணவிகள் சென்றனர்.

பல்கலைக்கழக முன்றலில் இருந்து புறப்பட்ட சவப்பெட்டி ஊர்வலம், பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியை சென்றடைந்ததும் அங்கு கொடும்பாவியும் சவப்பெட்டியும் தீக்கிரையாக்கப்பட்டது. முன்னதாக அங்கு சவப்பொட்டி மற்றும் கொடும்பாவியினை வைத்து இறுதிஅஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன. தமிழ்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பல்கலைக்கழக விரிவுரையாளர் செ.சிதம்பரநாதன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.

அதைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட பிரகடனம் வாசிக்கப்பட்டது. தமது கோரிக்கைகளுக்கும், அகிம்சைப் போராட்டங்களுக்கும் தென்னிலங்கை அரசியல் சக்திகள் மதிப்பளி விட்டால் மக்களை ஒன்று திரட்டி பெருமெடுப்பிலான போராட்டத்தை முன் னெடுக்க யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகம் தயாராகி வருவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் கொள்ளிவைத்து சவப்பெட்டியும், கொடும்பாவியும் தீயிடப்பட்டன.

இதேவேளை இப்போராட்டத்தினால் பலாலி வீதியூடான போக்குவரத்துக்கள் சுமார் அரைமணி நேரம் துண்டிக்கப்பட்டிருந்தது. மேலதிக படையினரும், பொலிசாரும் அச் சூழலில் குவிக்கப்பட்டிருந்த போதும் வன்முறைகளேதும் [illegible]பெறவில்லை. (27,33,41)

## பொதுக்...

அணிந்தவாறும் முழக்கங்களை எழுப்பினார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்புக்கோட்டை புகையிரத நிலையத்தைக் கடந்தபோது சிறிலங்காப்பொலிசார் வீதித்தடைகளைப் போட்டனர். இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், அங்கிருந்த பொலிசாருக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்தன.

இதனையடுத்து பொலிசார் கண்ணீர்ப்புகையடித்தும் பவுசர்கள் மூலம் தண்ணீர் அடித்தும் ஆர்ப்பாட்டத்தைக் கலைத்தனர். பொலிசாரினால் அடிக்கப்பட்ட கண்ணீர்ப்புகைக்குண்டுகள் கோட்டை புகையிரத நிலையம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த தேசிய பிக்குமார் முன்னணியின் உண்ணாவிரத மேடையில் விழுந்து வெடித்தது. சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த பௌத்த பிக்குகள் தம்பர அமில தேரர் உட்பட அங்கிருந்தவர்களும் சிதறி ஓடினார்கள். இதனால் இவ் வீதியில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை காரணமாக சுமார் இரண்டு மணி நேரம் போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புடைய பிக்குகள் உட்பட 35 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

இந்தப்போராட்டம் காரணமாக கோட்டை புகையிரத நிலையத்திலிருந்தான புகையிரதசேவைகளும் தடைப்பட்டிருந்தன. (32)

## சந்திரிகா...

வழங்கப்பட்டிருந்த- விடையங்களிலேயே தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாக இருப்பதாகவும் அதனையே மீண்டும் வலியுறுத்தியுள்ள தாகவும் கூறப்படுகின்றது.

ஆனால் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நாட்டில் எழுந்துள்ள தற்போதைய சூழ்நிலை குறித்தும் அதனை நிவர்த்திப்பது குறித்தும் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

## மரண...

பலியானதுடன் ஒருவர் காயமடைந்தார். இதன்போது ஒருவர் தப்பிச்சென்றார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது

இந்த நிலையில் சம்பவத்தில் பலியானவரின் மரணச்சடங்கு இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையில் கடந்த சனிக்கிழமை தாக்குதலின் போது தப்பிச்சென்றவரை இலக்கு வைத்தே நேற்றைய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## நவம்பர்...

கைச்சாத்திடப்படும் பட்சத்தில் ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது ஆதரவும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆதரவும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றார். ஞாயிற்றுக்கிழமை தமிழ்த்தேசிக் கூட்டமைப்புடன் நடந்த சந்திப்பில்கூட கூட்டமைப்பின் ஆதரவை எதிர்பார்ப்பதாக முற்கூட்டியே நேரடியாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு மலையக மக்கள் முன்னணி ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் ஆட்சியைத் தக்கவைப்பதற்கு மேலும் எட்டுப்பேரின் ஆதரவு அவருக்குத் தேவைப்படும். அப்படியான சூழ்நிலை வரும்பொழுது ஜே.வி.பி வெளியேற்றம் காரணமாக ஏற்படும் நான்கு அமைச்சர் பதவி மற்றும் நான்கு பிரதியமைச்சர் பதவிகளை வழங்கி ஐக்கியதேசிக் கட்சியில் இருந்து சிலரை தன்பக்கம் இழுக்க முற்படுவார் என்றும் அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் நிலவுகின்றன.

தற்போதைய அரசியல் நிலவரப்படி பாராளுமன்றத்தைக் கலைக்கும் உத்தேசம் சனாதிபதிக்கு இல்லை. நவம்பர் மாதம்வரை பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதன் மூலம் இடைப்பட்ட காலத்திற்குள் நிலைமையை சமாளிக்க முடியுமென அவர் எதிர்பார்ப்பதுபோல் தெரிகின்றது.

நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி என்ற ரீதியில் அமைச்சர்களே இல்லாமல் முழு அமைச்சுக்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும்.

இதனை நேரடியாகச் செய்ய முடியும். அல்லது யாரையாவது நியமித்து பாராளுமன்றத்தை ஒத்திவைக்க முடியும்.

அதாவது வரவு-செலவுத்திட்டம் வரை இதனை ஒத்திவைக்க அரசியல் யாப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது. என சனாதிபதி நேற்று முன்தினம் வானொலி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தனது கருத்தை வெளியிட் டுள்ளார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது